நாடும் மொழியும்
நம்மிரு கண்கள்



இரா. இளங்குமரன்

நாடும் மொழியும் நம்மிரு கண்கள்

இரா. இளங்குமரன்

வெளியீடு

திருவள்ளுவர் தவச் சாலை

திருவளர்குடி (அல்லூர்),

திருச்சிராப்பள்ளி மாவட்டம்,

620 101.

நூலின் தலைப்பு	நாடும் மொழியும் நம்பிரு கண்களே
பதிப்பு ஆண்டு	1997
நூலின் ஆசிரியர்	இரா. இளங்குமரன்
விலை	உருபா 20/-
பக்கம்	80
வெளியீடு	திருவள்ளுவர் தவச்சாலை திருவானர்சூடி (அல்லூர்) திருச்சிராப்பள்ளி மாவட்டம் 620 101. தமிழ் நாடு.
கணிப்பொறி அச்சு :	ஈகவர் லேசர், சென்னை . 18.

1. தமிழ் நூறு

நூலாசிரியன் முன்னுரை

தமிழைப் பற்றிய நூறு பாடல்களையுடையது இத்தமிழ் நூறு.

மதுரை, அரவிந்தர் கண் மருத்துவ மனையில் என் இடக்கண் கரும்படலத்தை ஒட்டி இடப்பால் திரண்டிருந்த தசையை அறுத்துக் கட்டுடன், 22-11-83 முதல் 28-11-83 வரை தங்கினேன். கட்டுடன் கண்ணை மூடிக்கிடப்பவன். நூல் ஒத வாய்க்குமோ? நூல்யாக்கவாய்த்தது! உரைநடையினும், பாநடையே அந்நிலையில் யாத்தல் இயல்பும் எளிதும் ஆயிற்று. அந்த ஆறு நாள் கொடையே இந்த நூறாம்!

இளந்தைப் பருவம் தொட்டே, இரவுப் பொழுதில் கண்ணைத் திறவாமல் பாவெழுதுவதும் பகற்பொழுதில் படியெடுத்துக் கொள்வதும் என்னுள் ஊன்றிய வழக்காறு! படுக்கைப் பக்கல் தாளும் எழுதுகோலும் வைத்துக் கொள்வதே என்றும் நடைமுறை. பழகிப்போன ஒன்று எளிமைப்பட்டு விடுவது இயற்கைதானே!

எழுதுவதில் இடர்ப்பாடு இல்லை எனினும், எழுதுகோல் இடர்ப்பாடு நேர்ந்துவிடும் எழுத்தின்மேல் எழுத்துப் படிவ துண்டு; வரிமேல் வரி படிவதுண்டு; எழுதிய எழுத்துப்படியாமல்

கிறலே இருப்பதும் உண்டு; தாளின் அளவைக்கடந்து புறத்தே போய்விடுவதும் உண்டு; ஆயினும், உந்தும் உணர்வுக்கு ஒரு சிறு தடைப்பாடும் இல்லாமல் வெளிப்படுவதற்குக் கண்ணைத் திறவாமல் எழுதுதல் பெரு வாய்ப்பாம். அகத்தோட்டம் ஒன்றே உந்த அரும்பும் பா, பொருட்சிறப்பினும் உணர்வுச் சிறப்பே மிக்கிருக்கும் என்பது தெளிவு. பாடல் சுவைக்கு மூல ஊற்று உணர்வேயன்றோ!

தமிழ்நூறு சிற்றிலக்கிய வகையுள் ஒன்று. 'சதகம்' என்பது தமிழியற்படி 'நூறு' எனப் பெற்றது. முந்தையோர் 'பதிற்றுப் பத்து' என்றனர். இப்பெயரால் கழக நூல் உண்டு. நூறு பாடல் களைக் கொண்டது அது. பின்னே, 'பதிற்றுப் பத்து' அந்தாதிகள் வெளிப்பட்டன. அந்தாதி என்பது நின்ற பாடலின் இறுதி, வரும் பாடலின் முதலாக வரப் பாடப்பெறுவதாம். அந்நிலையில் இந்நூலும் யாக்கப் பெற்றுள்ளது. பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து, இவ்வாறு இயலும் முன்னோடி!

இத்தமிழ் நூறு எளிமையாய், ஓடும் ஓட்டத்தில் இயன்றது. சொல்லறுப்பு, சொற்செறிப்பு என்பவை பெரும்பாலும் இன்றிச் சொற்சீரே அமைய யாக்கப்பெற்றது. மிக மிக அருகிவரும் அருஞ்சொற்களும், இட அமைதியால் பொருள்காண இடர் தாராததாய் அமைந்துள்ளன. எளிய சொல்லாட்சியே எனினும். ஊன்றி உணரத்தக்க குறிப்புகளும் உள்ளுறையாக உண்மையைத் தோய்ந்து சுற்போர் அறிவர்!

தமிழின் சிறப்புகள் பலப்பல குறிக்கப்பெறுகின்றன. வரலாற்றுச் செய்திகள் சில சுட்டப்பெறுகின்றன. இலக்கிய ஆர்வலர்கள், தாமே இவற்றை அறிந்து கொள்ள இயலும்!

இக்காலத் தமிழ் மக்களும், கல்வித் துறையாரும், ஆட்சியாளரும் செய்யத்தக்க பணிகள் சில குறிக்கப் பெறுகின்றன. மொழியால் தமிழர் ஒன்று படுதல் (87, 88) மொழித்திறம் வல்லாரைக் கலந்து ஆய்ந்த பின்னரே மொழித்துறையில் அரசு தலையிடல் (63, 64) மொழியைப் பேணி வளர்க்கத்தக்க வழிமுறைகள் (94) மொழிக் காவல் வேண்டல் (75) மொழித் தணிக்கையமைப்பின் இன்றியமையாமை (79) வழிபாட்டு மொழியும் ஆட்சி மொழியும் இசைமொழியும் பயிற்று மொழியும் தமிழாகவே இருத்தல் (65, 72) என்பவை அவற்றுள் சில.

நூல் தோன்றிய சூழலுக்கு ஏற்பக் "கண்ணே மணியே கண்மணியே" எனத்தொடங்கித், "தமியேன் கண்ணே கண் மணியே" என முடிகின்றது. நூலின் இறுவாயும் எழுவாயும் இவ்வாறு இயைதல் மண்டலிப்பு ஆகும்.

நூற்பாடல்கள் நூறும், வாழ்த்து, நூல் வருநிலை, அவை யடக்கு என்னும் தலைப்பில் வரும் பாடல்கள் மூன்றும் ஆகிய எல்லாம், அறுசீர் மண்டலப்பா (அறு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்) வகையின. 'மாமாகாய். மாமாகாய்' என்னும் யாப்புரவினது அறுசீரும்.

இந்நூலை முதற்கண் 1984 இல் வெளிக் கொணர்ந்தவர் சேலம் அரிமாப் பதிப்பகத்தார்! பதிப்பக உரிமையாளர் அரிமாப் புலவர் திருமலி மி.மு. சின்னாண்டார் - தனித் தமிழ்ப் பற்றாளர்! தனித்தமிழ் வாழ்வாளர்! பாவாணர் பணித்திறத்தினைத் தலைவணங்கிப் போற்றிய தகவாளர்.

இப்பதிப்பு, திருவள்ளுவர் தவச்சாலை வெளியீடாக வெளிப்படுகின்றது.

தாய்த் தமிழகத்து வாழ்வார்க்கும் மொழிப் பற்றும் மொழித் தொண்டும் உண்டாகும் வகையில் திகழ்ந்தவரும், தனித்தமிழ் ஊற்றம் மிக்கவரும், தமிழார்வலர்களை உருவாக்கியவரும் ஆகிய பேரறிஞர், மலையகத் தமிழ்மாமணி மாலனார். அவர்க்குச் செலாமா என்னும் சீர்திகழ் ஊரில் பெருந்தக்க நினைவகம் எழுப்பிய பெருமக்களுள் ஒருவர் திருமலி ஆ. மாரியப்பனார் அவரும் அவர்தம் அருமைத் துணைவியார் வெற்றிச் செல்வியாரும் தவச்சாலைப் புரவலரும் அறக்கட்டளையரும் ஆவர். அவர்கள் அறக் கொடை வழியே இந்நூல் தமிழார்வலர் கைகளில் தவழ வாய்த்தது. அப்பெருமக்களைத் தவச்சாலை பாராட்டுகின்றது.

வாழிய தமிழ்நெஞ்சம்! வாழிய தமிழறம்!

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப் பள்ளி 620 101
தமிழ் நாடு.

இரா. இளங்குமரன்

15.8.1997

நூல் முகம்

தமிழ் வாழ்த்து

நீல வானின் உயரத்தை
நெஞ்சம் கவரும் நிலப்பரப்பைக்
கோலக் கடலின் ஆழத்தைக்
குன்றத் தனமந்த பேருரத்தைச்
சாலத் துளிக்கும் பனிநீரைச்
சாந்தில் தொடுத்த தீந்தேனை
மூலச் சொல்லாய் முகிழ்த்தோங்கும்
முன்னைத் தமிழே வாழியவே!

நூல் வரவு

விழியில் வளர்ந்த தசையுரித்து
வெளிச்சம் காக்க அமைவுற்றேன்:
மொழியின் பற்று மூண்டெழும்ப
மொழிந்தேன் இந்தத் தமிழ்நூறு!
வழியுந் தேனாய் இன்றேனும்
வாய்க்குப் புளிக்கா தென்பதனால்
பொழிந்தேன் அறுசீர் மண்டலிப்பாப்
பொருந்தத் தொடுத்தேன் கண்மணியே.

அவையடக்கு

கண்ணை மூடித் தனிக்கிடந்து
காணா தெழுதும் பாடலிலே
பண்ணை இசையைப் பாநயத்தைப்
பாரார் உண்மைத் தெளிவுடையார்:
கண்ணைக் கட்டி விளையாடும்
காதல் இளையர் கைவயத்தே
நண்ணு பொருளும் நழுவாமல்
நாடி வந்து வாய்த்திடுமோ?

உள்ளுறை

1. தமிழ் நூறு 9

2. நாடும் மொழியும் நம்மிரு கண்கள் 53

1. தமிழ் நாறு

நூல்

1. தமிழ்த்தாய் விளிப்பு

கண்ணே! மணியே! கண்மணியே!
கனியே! தேனே! கற்கண்டே!
பண்ணே! இசையே! பழக்கூட்டே!
பாகே!சுவையே! பனிக்கூழே!
எண்ணே! எழுத்தே! ஏரணமே!
ஏரார் வளமே! இன்னமுதே!
உண்ணேர் உயிரே! உயிர்க்குயிரே!
ஒளியே உரிமைத் தமிழ்த்தாயே!

2. நயப்பின் பயப்பு

தாயே! தாயின் தனித்தாயே!
தவத்தால் பெற்ற தனிவாழ்வே!
வாயே! வாயின் வளமொழியே!
வையம் துலக்கும் வனப்புடையாய்!
பேயேன் வாழ்வைப் பெருவாழ்வாய்ப்
பிறங்க வைக்கும் பெருந்தக்காய்!
நாயேன் உன்னை நயவேனேல்
நயப்பார் எவரே எனையம்மா!

3. அழியாப் பேறு

அம்மா! உன்றன் அரவணைப்பால்,
அழியும் வாழ்வை அழியாமல்
செம்மாந் திருத்திச் சென்றவர்கள்
செப்பும் அளவிற் கிலையன்றே!
இம்மா நிலத்தின் மொழிக்கெல்லாம்
இனிய முதலே! இசைவாழ்வே!
செம்மா துளையின் சொல்லரசி!
சேயின் வாழ்வு தாய்க்கன்றோ!

4. காவல் திறம்

அன்றோ டின்றும் என்றென்றும்
அம்மை அப்பன் எல்லாமாய்
நன்றோ தீதோ அசைக்காமல்
நயந்து காக்கும் தமிழன்னாய்!
ஒன்றோ டொன்று சார்பாகி
ஒன்றும் வாழ்வே வாழ்வென்றால்
குன்றா வளமை உனையானோ
குலவும் வண்டு நமலரே!

5. மலரா மலர்

மலரே! மணமே, மிகவுற்றாய்;
மலியும் தேனும் மிடைவானாய்;
பலரும் பாடும் வாழ்வுற்றாய்;
பரவும் தெய்வப் பொருளானாய்;
மலரும் மலராய் மலராமல்
மலர்ந்த தமிழாம் நறுமலரின்
இலகும் மணமும் இன்தேனும்
என்றும் உன்னால் பெறலுண்டோ?

6. ஒப்பிலாத்தேட்டு

உண்டோ உனைப்போல் ஓரரசி?
உண்டோ உனைப்போல் ஓரழகி?
உண்டோ உனைப்போல் பேறமைந்தார்?
உண்டோ உனைப்போல் பெருவாழ்வர்?
உண்டோ உண்டோ உனைப்போல
உண்டுண் டுள்ளம் தெவிட்டாத
வண்டோ லிட்டு வளஞ்சேர்த்து,
வைத்துப் போற்றும் தேன்தேட்டே?

7. வளப்பெருக்கு

தேட்டில் சிறந்த தேட்டேஉன்
தேட்டில் திளைத்து விட்டறியார்,
ஏட்டில் கோடி எடுத்தெழுதி
எய்த்தார்; எய்யா எண்ணத்தால்,
காட்டில் மலையில் கடற்காலில்
காற்று வெளியில் கலந்தொலித்தார்;
பாட்டில் பயிலும் பசுங்கிள்ளாய்!
பாருன் வளத்தைக் கணிப்பாராஃ?

8. கணிப்பருமை

கணிக்க வல்லார், விண்மீனைக்
கணித்தா ரேனும் நின்நூலைக்
கணிக்க வகையார் கண்டார்கள்?
கண்ணே! கண்ணின் கருமணியே!
பிணிக்கும் அன்பால் வெளிப்பட்ட
'பிள்ளைத் தமிழ்'என் ணாயிரமேல்
கணிக்க உண்டோ நீபெற்ற
கனிப்பா கனைய நூலெல்லாம்?

9. ஆலமர் வித்து

நூலும் ஒன்றோ திருக்குறளே?
நூறு பத்தும் முந்நூறும்
சாலும் மூப்பான் பெருநூல்கள்
சமைந்த ஒன்றே திருக்குறளாம்!
ஏலும் அடிதாம் இரண்டேனும்,
ஈரா யிரமாய் நெடுமாலாம்;
ஆலின் விதையாம் அசைதானும்
அருமா வளமாம்; அளப்பாரார்?

10. அருணையுள் அருணை

அளக்க அறியா அளவைநீ!
அள்ளக் குறையா அமுதம்நீ!
விளக்கத் தொலையா விரிவான்நீ!
விள்ள இயலா விழுப்பொருள்நீ!
துளக்க அசையா மலையம்நீ!
தொடரத் தொலையா விரைவாய்நீ!
பிளக்க ஒண்ணாப் பெரியள்நீ!
பேசாப் பொருளும் நீயம்மா!

11. அருளீப்பாடுகள்

நீயே என்னை உணர்வித்தாய்!
நீயே உலகை அறிவித்தாய்!
நீயே இறையைத் தெளிவித்தாய்!
நீயே இறையாய் நிலைப்புற்றாய்!
நீயே உயிராய் உயிர்க்குயிராய்
நேர்ந்தாய்! தமிழே! தண்ணமுதத்
தாயே! இன்பத் தனிமுதலே!
தந்தாய் அருளால் தமிழியலே!

12. பல்வளம்

இயலில் இனித்தல் போதாதென்
நிசையில் இசைத்தாய்; அன்னதுவும்
செயலில் சிறக்க மிகவிழைந்து
சிறந்த கூத்தில் செறிவானாய்;
அயலில் தனித்தோர் உவப்புறவும்
அவர்தம் உள்ளுள் அமுதானாய்;
உயருங் கிள்ளை குயில்மயில்கள்
ஒன்றாய் இயைந்த ஒண்மொழியே!

13. மொழிப் பெருமை

மொழியின் பெருமை மொழிபவர்கள்
மூடர் என்று மொழிபவரோ,
மொழியின் பெருமை வாய்க்காத
மூட மூடர் எனலேயாம்;
வழியின் பெருமை, வாழ்வாலாம்
வளத்தின் பெருமை எல்லாமும்
மொழியின் பெருமை என்பதனை
மூங்கை கூட அறிந்திடுமே!

14. உரிமை அருளல்

மேரு மலையின் மேம்பட்ட
மேதை என்று சிலர்ப்புகழ்வர்;
மேரு மலையின் மேம்பட்ட
மேதை என்னக் கண்முன்னே
யாரும் அறியப் பாவாணர்
அமைந்தார்; அவரே சொல்லாய்வுக்
கோரும் துணையென் றெனையழைக்க
உரிமை யளித்தாய் நீயன்னாய்!

15. உவமை இன்மை

அன்னன் அடிக்க அழுகுழந்தை
'அன்னா' என்னல் கண்கூடே!
அன்னை! உன்னை அடைவாய
அறிவன் வறுமை நோய்கட்குத்
தன்னை இரையாய்த் தந்தாலும்
தன்னை மறக்கும் வேளையிலும்
உன்னை மறந்தான் இலையம்மா!
உனக்கோர் உவமை இலையம்மா!

16. என்றும் துணை

அம்மை என்னும் சொல்தந்த
அம்மை மறைந்தார்; அவர்மொழிந்தே
எமனை ஆண்ட தந்தையரும்
இயற்கை எய்திப் போய்விட்டார்;
இம்மைத் துணையாய் வாய்த்தவரும்
இடையே பிரிந்து போய்விட்டார்
மும்மைத் துணையாய் முழுதானாய்!
மூத்த தமிழே! நீயேதான்!

17. தமிழ் ஏடு

தானே பிறந்து வளர்வாகித்
தானே காய்ந்து மடிகின்ற
ஏனை ஏடு போலாமல்
எழிலார் தமிழே டிவ்வுலகம்
தானே வாழும் காலமெலாம்
தானும் வாழும் பேறெய்தத்
தேனேய் தமிழே! நீயருளித்
தெய்வப் பேற்றில் வைத்தனையால்!

18. ஊட்டி வளர்த்தல்

ஆலம் பழத்துள் அணுவுயிராய்
அரும்பிக் கிடந்து மடிவாகிக்
காலும் தலையும் தெரியாமல்
கழியும் புழுவாய் மறைவாரைப்.
பாலும் தேனும் பரிந்தூட்டிப்
பாசம் மாறா அன்பூட்டிச்
சால வளர்த்தாய்! சாவாத
சான்றாய் வைத்தாய்! திறனொன்றோ!

19. உலக முதன்மொழி

ஒன்றே தெய்வம் எனக்கண்டார்;
ஒன்றே மதமென் றுரைக்கின்றார்;
ஒன்றே குலமென் றறிவானார்;
ஒன்றே உலக மொழியென்றே
ஒன்றாய் அறிஞர் உரைக்கின்றார்;
ஒன்றும் ஒன்றா ஒன்றாய
ஒன்றே! தமிழே! உயரமுதே!
ஒன்றாம் உயிர்தான் நீஎனக்கே!

20. தொண்டர் பெறும் பேறு

எனக்குச் செய்யும் நலமெல்லாம்
எனக்குச் செய்வ தெனவெண்ணார்;
மனக்குத் துணையாம் மாமருந்தே!
மாறா நலத்து மாணமுதே!
நினக்குப் பொருளாய் நானிருத்தல்
நினைவோர் உள்ளம் விரிவாகி
உனக்குச் செய்யும் நலமென்றே,
ஓடி ஓடி உதவுவரே!

21. ஒரு கரணியம்

ஓடி ஓடி வருமுதவி
உருகி உருகி நிற்குநிலை
தேடித் தேடிக் காணுநிலை
தேர்ந்து வாழ்த்தும் பெருக்கநிலை
நாடி நரம்புக் கால்களெலாம்
நானே என்று தமிழன்னாய்!
கூடி நீயே இருப்பதனால்
குவியும் நலமாம் வேறென்னோ!

22. தாயினும் தாய்

நோயிற் கிடந்து தவித்தாலும்
நொம்ப லங்கள் வாட்டுதலால்
பாயிற் கிடந்து பதைத்தாலும்
பக்கத் திருந்து பரிவாகத்
தாயிற் சிறந்த தகையோடு
தணியாத் துயரும் தவிர்க்கின்ற
வாயிற் செவியில் வரையேட்டில்
வாழும் தமிழே வள்ளியளே!

23. வளப்பேறு வாய்ப்பு

வள்ளற் செல்வம் எனக்கில்லை;
வளமாம் பதவி எனக்கில்லை;
உள்ளற் கினிய செயலாண்மை
ஒன்றும் இல்லை எளியேற்கே;
கள்ளற் கரிய கலைச்செல்வி!
கன்னித் தமிழே! உன்னருளை
அள்ளிப் பொழிந்தாய் பற்பலவும்
அள்ளிக் கொண்டேன் அப்படியே!

24. பற்றாட்டு

படித்தார்; பார்த்தார்; பழக்கானார்;
பலரும் அன்பு செய்கின்றார்;
அடித்தால் கூட அரவணைப்பாய்
அணுகும் அன்புச் செல்வருளார்;
துடிக்கும் மூச்சும் பேச்சுமெலாம்
தூய தமிழே என்பதனால்
பிடித்த பேறே இவையம்மா!
பேயேற் கென்னே பிறிதம்மா!

25. பிரிவிலாப் பெருநிலை

பிரிந்தும் பிளந்தும் செல்கின்ற
பிறவி இயற்கை உலகத்தில்
வரிந்த உடையும் ஒருவேளை
வாளா இழியும் வாழ்விடையில்
பிரிந்து செல்லா உரிமையளே!
பிறவி தொட்டே இறுதிவரை
உரிமை காட்டி உறைபவளே!
ஒண்தீந் தமிழே! உயிரேநீ.

26. பெயரும் பெருவாழ்வும்

உயிரும் மெய்யும் உயிர்மெய்யும்
ஒரும் நுணுக்க ஆய்தமுமாம்
பெயரைச் சுட்டிப் பெருவாழ்வின்
பெரிய பொருள்கள் எல்லாரும்
அயரா தறியச் செய்துள்ள
அன்னைத் தமிழே! உன்னருமை
முயலா மாந்தர் அறிந்துய்யார்!
முயல்வார் மூலப் பொருளோரே!

27. மூலப்பழமை

மூலப் பழமை முழுதுரைக்கும்
முன்னைப் பழமை முழுப்பொருளே!
காலப் பழமை சாற்றுகிற
காலங் கடந்த கவின்பொருளே!
வாலப் பருவக் குமரியெனும்
வையப் பழமை முதன்மொழியே!
மேலைத் தவத்தோர் தவமெல்லாம்
மேவ முன்னம் முகிழ்த்தாயால்!

28. மூலவளம் மொழிவளம்

ஆலைச் சாறு பெருக்கெடுத்தே
ஆறாய்ச் சென்றால் தானென்ன?
சோலைக் கனியின் சாற்றுவளம்
சுழன்று சென்றால் தானென்ன?
பாலைத் தேனைப் பரிமளிக்கும்
பைந்நா டென்றால் தானென்ன?
மேலைப் பழமைத் தமிழுன்னை
மேவும் பேற்றிற் கிணையின்றே!

29. இன்ப நிலையம்

இன்றென் நாளும் பொழுதுமெலாம்
இன்பங் கொழிக்க நடப்பதற்கே
ஒன்றும் என்றன் செயலென்ன;
ஒன்றும் இல்லை உயிரன்னாய்!
உன்றன் பணியே பணியென்ன
ஒன்றிக் கலந்தேன்; அவ்வொன்றே
நின்ற நிலையாய் நிலைப்படுத்தி
நீளும் இன்பம் அருளுவதே!

30. நினைக்க இனித்தல்

தேனைச் சுவைக்கத் தித்திக்கும்;
தெவிட்டத் தெவிட்டச் சுவைத்தார்க்கும்
தேனை நினைக்கச் சுவைத்திடுமோ?
தேனீ அறியா நறுந்தேனே!
வானார் அமுதம் ஈதென்ன
வாய்த்த தமிழே! உனைநினைத்தார்,
ஊனை உணர்வை உயிரையெலாம்
உவட்டி உவட்டி இனியாரோ?

31. நிலைத்த நிலை

யாரும் சொந்தம் இலையுலகில்;
யாரும் நிலைத்த உரிமையிலர்;
பேரும் புகழும் கூடநிலை
பேறாய் நிற்கும் நிலையில்லை;
யாரும் விரும்பும் நல்லமுதே!
யாண்டும் இனிக்கும் சுவைப்பாகே!
போரும் ஒடுக்கும் பூந்தமிழே!
புகல அரும்பும் கட்பனியே!

32. தனிமை இன்மை

பனியே பொழிந்த பாருலகம்
பளிச்சிட் டொளிர்ந்த பழநாளில்
தனியே தோன்றித் தனிமொழியாய்த்
தனிக்கோ லோச்சும் தமிழ்த்தாயே!
கனியே! உன்றன் அடைக்கலமாய்க்
கலந்த புலவர் படைப்புண்பார்
தனிமை இல்லாத் துறவோரே!
தமிழைத் துறப்பார் துறவோரோ?

33. துறவோர் துறவாதது

துறந்தார் பெற்றோர் இருவரையும்;
துறந்தார் உடனாம் பிறப்பினரை;
துறந்தார் நலமும் பொலமுமெலாம்;
துறந்தார் இளங்கோ தந்நலமும்;
துறந்தார் துறவாத் தூய்தமிழே!
துறவோன் ஒருவன் உனைத்துறந்தால்
துறந்தான் அல்லன் என்றுலகம்
துணியச் செய்த திறமாமே.

34. இரத்தல் இழிவு

ஆவிற் கிரத்தல் பிறவுயிரின்
ஆர்வத் துதவி என்றாலும்
நாவிற் கிழிவாய் நாவலர்தாம்
நவின்றார்; உண்மை ஈதெனினும்
பாவிற் கிடமாம் பைந்தமிழே!
பாருன் இசைமைப் பாட்டெழுத
ஏவிற் றென்னை †'மை'வேண்டி;
இரந்தேன் பெற்றேன் எழுதினெனால்!

35. இரத்தல் அழகு

இரத்தல் அழகாம்; எவரிடத்தில்?
'இல்லை' என்னல் அறியாத
வரத்தில் வாழ்வார் இடத்தென்றார்,
வள்ளல் பெருமான் வள்ளுவனார்;
பரக்கும் பாரின் மொழிக்கெல்லாம்
பாலூண் அருளு பைந்தமிழே!
உரத்துச் சொல்வேன்; உன்னன்பால்
உருகிக் கல்லும் உதவிடுமே!

---

† எழுதுகோலில் மை தீர்ந்து விடச் செவிலியரிடம் கேட்டுப் பெற்றமை

36. மொழி நிலைகள்

கற்றார்க் கமுதம் விளைக்கின்ற
கன்னித் தமிழே! கல்வியினைப்
பெற்றே அறியார் தாமுமுறப்
பேசுங் கேள்விப் பொருளானாய்;
நற்றாய் ஆக நலங்கொழித்து
நாச்சொல் கேளா மூங்கையரும்,
சற்றே யுணரச் சைகைமொழிச்
சாரல் ஆட்டித் திளைத்தாயே!

37. தென்னன் தமிழ்

ஆட்டி எடுக்காச் சாறேநீ!
அலைத்துக் கடையா நெய்யேநீ!
கூட்டில் தொடுக்காத் தேனேநீ!
கொள்ளக் குறையா வளமேநீ!
பூட்டிக் காவாப் பொற்பேநீ!
பொழுதில் மறையாக் கதிரேநீ!
தேட்டில் தேட்டாய்த் தித்திக்கும்
தென்னன் தமிழே! பூவேநீ!

38. நறுந்தமிழ் நன்மணம்

பூவின் மணமும் புகைமணமும்
பொருந்திக் காற்றில் வந்தாலும்,
நாவின் மணமாம் நறுந்தமிழ்போல்
நயக்கும் மணமாய் அமைந்திலவே!
பாவின் சுவையில் தோய்வுடையார்
பண்ணோ டிசைக்கும் பைந்தமிழே!
தேவின் வடிவாய்த் திகழ்வாகித்
தேனீ வண்டாய் முரல்வாயே!

39. எங்கும் காணா இனியமழலை

வண்டுங் குயிலும் இசைத்தாலும்,
வளைவாய்க் கிள்ளை மொழிந்தாலும்,
உண்டு கவையென் றோரொருகால்
உள்ளங் கிளர்ந்து களித்திடலாம்!
மண்டுந் துயருக் கவையெல்லாம்
மாறாத் துயரே செய்திடுமாம்;
கண்டின் சுவையே! கனித்தமிழே!
காணா மழலை மொழிநீயே!

40. அமுத மகவு

மழலை இனித்தல் கண்கூடாய்
மகிழ்ந்த பெருமான் வள்ளுவனார்
குழலும் யாழும் பெற்றிருக்கும்
குறிப்பை மழலைக் களித்தாரால்;
உழலும் உலகில் எக்காலும்
உயிர்கள் தளிர்க்க வந்துள்ள
மழலைக் குழந்தாய்! பேருலகின்
மாறா அமுதத் தலைமகவே!

41. கலையின் முடி

தலையுந் தந்தான ஒருகுமணன;
தனையுந் தந்தான் ஒருகபிலன்;
கொலையுந் தவிர்ந்தான் குளக்கிள்ளி;
கொல்போர் ஒழிந்தான் கோச்சோழன்;
அலையும் உளத்தை அலையாமல்
அசையா மலையாய் அமைக்கின்ற
கலையின் முடியே! கனித்தமிழே!
கடைக்கண் ணருள்தான் விளக்கரிதே!

42. விளக்கமே விடிவு

விளக்கை ஏற்றி வழிபடுவார்;
வீழ்ந்து கதிரை வழிபடுவார்;
அளக்க அரிய வானத்தில்
அசையும் மீனைக் கணித்தறிவார்;
உளக்கில் கிழக்கு மேற்குரைத்தே
உரமாய்ப் பொருவார்; அம்மேயுன்
விளக்கம் இன்றேல் விடிவில்லை;
விளக்கம் †கணியன் நாட்டினனே!

43. பீடும் பெயரும்

நாடு கடந்து வந்தோரை,
நன்றாய்ப் பிணித்த சுவையாலுன்
ஏடு கடந்து போகாமல்
என்றும் இருக்க நிலைப்பித்தாய்;
பாடு புலவர் வாழ்வோடு
பரிசில் ஈந்த புரவலரின்
பீடும் பெயரும் பெயராத
பேறு தந்த பெருமகளே!

44. பருவப் பொருத்தம்

மகளே நீயென் றழைப்பதுவும்,
மலருங் குமரி என்பதுவும்,
புகழுங் கன்னி என்பதுவும்,
பொருந்துந் தாயே என்பதுவும்,
தகவாக் கொண்டு தனித்தனியே
தக்க பொருத்தம் வெளிப்படுப்பாய்!
புகலாப் பூவின் புதுத்தேனே!
பூமா தறியாப் புகழ்ப்பூநீ!

---

† "யாதும் ஊரே யாவரும் கேளிர்"

45. பேனும் பெருமாளும்

பூனை போலும் ஒருவனையும்
புகுந்த திறத்தால் வளர்ந்தோங்கி
யானை போலப் பொலிவுறுத்தும்
அருமை அருளும் தமிழ்த்தாயே!
தேனைப் பாலைத் தித்திப்பைத்
தேக்கி வைத்த பாகனையாய்!
பேனைப் பெருமாள் ஆக்குவதில்
பெரியாள் நீயே! காணம்மா!

46. களஞ்சியத்துக் கைப்பொருள்

காணற் கரிய கருத்தெல்லாம்
களஞ்சி யத்துப் பொருளாகப்
பேணிக் காத்துக் காலமெலாம்
பெருக வழங்கும் பெருமகளே!
பூணற் கரிய புத்தணிகள்
பூட்டிப் பார்க்க நின்மக்கள்
ஏணற் றிருத்தல் என்னேயோ?
எழுச்சி கொள்ளக் கடைக்கணிப்பாய்!

47. வீரர் திருத்தகை

†கண்ணன் பாலை அரங்கேற்றிக்
காணம் பதினாறா யிரங்கொள்
வண்ணத் தமிழ மண்டபத்தை
வன்போர் வீர பாண்டியனும்
திண்ணங் காட்டி இடிக்காமல்
திரும்ப வந்த திருத்தகைமை,
எண்ணஞ் சிறந்த நின்பெருமை
எங்குந் தெளியக் காட்டியதே!

---

† கடியலூர் உருத்திரங்கண்ணன்; பட்டினப்பாலை

48. பாவலர் பரிசு

“காடு மலைகள் கடந்தேகிக்
காண வந்தேம்; மயிற்கிரங்கிப்
பீடு பிறங்கும் பேக!நின்
பெருமைக் கேலாப் பிரிவிதனை,
வீடு கொள்க; விரைவாய்நின்
வீடு செல்க; நின்றுணைவி
பாடு தவிர்த்தல் பரி”சென்று
பகர்ந்த துன்றன் பண்பாடே!

49. சுடரும் வாழ்வார்

ஆட்டிப் படைக்கும் அதிகாரம்,
அடக்கி ஒடுக்கும் செல்வவளம்,
கூட்டிப் பிரிக்கும் அரசாற்றல்,
கும்பல் சேர்க்கும் செல்வாக்கு,
சூட்டி வைத்த நலமொன்றும்
சுற்றா தாரும் சுடர்வாராம்!
ஏட்டின் முதலே! உன்றனுக்கே,
இருப்பார் ஆளாய் எனும்ஒன்றால்.

50. புனைகதையர் பொல்லாங்கு

ஒன்று சொல்வேன் புனைகதையார்
உனக்குச் செய்யும் நன்மையினும்
கொன்று குமைப்ப தெனவுன்னைக்
குத்திக் குடைந்து குழிப்புண்ணாய்
என்றும் மாறா வடுவாக்கி
எழுது கின்றார்; இக்கயமை
பொன்றித் தொலைய வழியென்னே?
போக்காய் அவர்தம் பொல்லாங்கே!

51. வரிசைத் திறம்

பொல்லாங் ககத்துப் புகுவேனை,
பொருளை எண்ணாப் புழுவேனை,
கல்லாப் பிழையும் கருத்துணர்ந்து
கரையாப் பிழையும் கலந்தேனை
நல்லார் நடுவுள் ஆளாக்கி
நயக்கும் நலத்தில் வைத்தவளே!
வல்லாய் உன்றன் விளையாட்டு
வரிசை கூறும் வரைத்தாமோ?

52. ஐந்திணை வளம்

வரையை உரைக்க ஒருகபிலன்;
வளரும் முல்லைக் கொருபூதன்;
கரையார் மருதக் கொருபோகி;
கடலுக் கென்றோர் அந்துவனார்;
உரையும் நடுக்கும் பாலைக்கே,
உரிமை பூண்ட இளங்கடுங்கோ;
திரைதல் இல்லாத் தெள்ளமுதே!
தேடி வந்த திருவேநீ!

53. பாடு புகழே புகழ்

திருவே பெற்றுத் திளைத்தாலும்,
திறனே யுற்றுச் சிறந்தாலும்,
மருவா இன்ப நலமெல்லாம்
மருவித் தளிர்த்து வாழ்ந்தாலும்,
ஒருவா முதற்புலவர் †"மருதன்
உரையே உண்மை வள"மென்று
பெருமா மன்னன் பாடினனால்;
பெரியாய்! நின்சீர் பேசரிதே!

---

† மாங்குடி மருதன்.

54. இயற்கை மொழி

அரிய இயற்கை ஒலியுடையாய்;
'அஆ' 'இஈ' உணர்வன்றோ!
அரிய இயற்கை வடிவுடையாய்;
அவற்றின் வடிவம் வட்டமன்றோ!
பெரிய வரையைக் கல்லியெலி
பிடிக்கும் முயற்சி இல்லாமல்
தெரிய எழுத்தைக் கூட்டியதும்
தேடி வருமுன் சொற்பொருளே!

55. சொற்சுவை

சொல்லிற் கடங்காப் பெருமகளே!
சொற்கோ, கீரன், அருணகிரி
சொல்லின் இன்பம் சுவைத்தவளே!
சொல்லக் கேட்டுக் கல்லுருகும்
சொல்லின் திருவா சகமென்றே
சொன்ன சொல்லின் சுவையழுதே!
சொல்லின் பொருளை எளிதுணரச்
சுட்டும் இடைச்சொல் கண்டாயே!

56. கழகச் சான்றோர்

கண்டு களித்த காட்சிகளைக்
கைம்மேற் கனியாய்க் கழகத்தார்
விண்டு வைத்தார்; பின்னாளை
வீழ்ச்சிப் புலவர் பொய்ப்புனைவே
கொண்ட குறியாய்க், குலவியசீர்க்
கொள்கை சாய்த்துக் குறுநோக்கில்
சண்டை யிட்டுச் சால்பின்மைச்
சான்றாய் நின்றார் எலிபுலியாய்!

57. ஒலி நலம்

எலியும் புலியும் இயலுலகில்
எறும்போ டெறும்பி வாழுலகில்
வலியும் மெலியும் வளருலகில்
வைப்பாய் வாய்த்த வண்டமிழே!
வலியும் மெலியும் இடையோடு
வனப்பாம் இனங்கள் மூன்றுடையாய்!
வலியும் மெலியும் இடையினையதல்
வாழ்வின் விளக்கம் தானம்மா!

58. கடைத்தேற்றும் கனிவு

தன்னைப் புகழ்ந்து செருக்குலகில்
தவற்றில் தவழும் தாழுலகில்
முன்னைப் புகழ்ந்து பிற்பழிக்கும்
முழுத்த வஞ்சப் பாழுலகில்,
தன்னை அறிய அறிவித்துத்
தன்னை யுடையான் தனைக்காட்டித்
தன்னை யுய்க்கும் தகையூட்டும்
தமிழே! கொம்புப் பழம்நீயே!

59. எம்மைக்கும் இனியகனி

கொம்பில் பழுத்த பழமேனும்
கொய்யா துதிர்ந்த கனியேனும்
நம்புஞ் சுவையோ டப்பொழுதே
நயந்து மாறிப் போயிடுமே!
எம்பால் அமைந்த தனித்தமிழே!
என்றும் சொட்டும் சுவையாகி
இம்மை உம்மை இன்பானாய்!
எளிதோ உன்றன் இயல்போதல்?

60. காதல் பொருள்

போதல் வருதல் ஆம்வாழ்வில்;
புலம்பல் புல்லல் ஆம்வாழ்வில்;
சாதல் பிறத்தல் சார்வாழ்வில்;
சலியா மலையும் சலிவாழ்வில்;
வேதல் தணிதல் விரிவாழ்வில்;
விருப்பும் வெறுப்பும் இயைவாழ்வில்;
காதல் பொருளாய்க் கலந்தவளே!
கட்சிப் பொதுவே நீயம்மா!

61. கட்சிப் பொதுப் பொருள்

கட்சி கட்டிக் கொடிபிடித்துக்
கண்ட படியாய் ஆட்சிசெயும்
கட்சி யாட்சிக் காலத்தில்
கட்சி மறந்து நின்மீது
கட்டிப் பாகாய்க் கவின்பொன்னாய்க்
காட்டி யன்பு பொழிகின்றார்;
விட்டு விலகாப் பதவிக்கே
வீசி எறியும் நடிப்பம்மா!

62. வயிறோரிடம் நெஞ்சோரிடம்

நாட கத்தில் நடிப்பார்போல்
நங்கை நின்றன் தொண்டுகளை
ஊட கத்துக் கொள்ளாமல்
ஊட்ட மாக வயிறதற்கே
தேடத் தக்க வழியாக்கித்
திருட்டாய் நெஞ்சைப் பிறிதிடத்தில்
கூட வைத்தல் குறியானார்;
கொடிதாம் அந்தோ கொடிதிதுவே!

63. சீரறியாச் சீர்திருத்தல்

கொடுமை! அந்தோ! நின்வனப்பின்
கோடி கூட அறியாரும்,
நெடுநாள் ஆய்ந்த அறிவர்போல்
நேராத் திருத்தம் செய்தற்குக்
கெடுபோர் தொடங்கிக் கிளர்ந்துள்ளார்;
கிடைத்தற் கரிய கிளர்மணியே!
குடுவை ஒட்டை காணறியார்,
குறளில் குற்றம் காண்பாரோ?

64. மொழியறியார் மொழித்திட்டம்

காணற் கரிய கலைக்கூடம்
காண அமைப்பர் சிற்பரையே!
பேணற் கரிய பண்ணைவளம்
பேண அமைப்பர் உழவறிஞர்!
பூணற் கரிய பூணணிந்து
பொலியும் இயற்கை எழிலுடையாய்!
கோணற் கொள்கை கொண்டோரால்
கொந்திக் குதற வந்தாரே.

65. தீந்தமிழ், கோயிலுக்குத் தீட்டு

வந்தார் ஆழ்வார் நாயன்மார்;
வரிப்பா மலரால் வழிபட்டார்;
சிந்தா மணியாம் இம்மணிகள்
சேர்தல் கோயில் தீட்டென்று
தொந்தி வளர்த்தல் ஒன்றேதம்
தொண்டாய்க் கொண்டார் தொள்ளையர்கள்;
செந்தேன் பொழிவைச் சீற்றமிகு
செந்தேட் கடியாய் நினைவாரோ?

66. உணர்விலா என்புதோலர்

நினைக்க நாணும் நிலையாளர்,
நினக்காம் எழுத்தோர் ஐந்தென்று
தினைக்குள் பனையை மறைப்பார்போல்
தீர மறைத்துப் பாழ்செய்தார்;
மனைக்குள் கூட மாத்தமிழை
மறந்தும் பேசா மடவோர்கள்
எனைத்தும் சீறி எழுவாரோ?
என்பு தோலுக் கென்னுணர்வே?

67. உணர்வு உணர்வானர்க்கே

உணர்ச்சி மிக்க பாவேந்தர்
ஒழியா துரைத்தார் தமிழியக்கம்;
உணர்ச்சி மரத்த உன்மக்கள்,
ஒட்டைக் குடமாய் நின்றார்கள்;
உணர்ச்சி வாயில் உணர்வோர்க்கென்
றுரைத்த தொல்லோன் உரைமாண்பை
உணர்ந்தும் உணர்த்தா திருத்தற்கென்
னுணர்ச்சி கேளா துரைத்தேனே!

68. மொழிக்கேடரை அறிதல்

உரைத்துப் பார்ப்பார் பொன்மாற்றே;
உரித்துப் பார்ப்பார் நென்மணியே;
வரைத்தேன் வைப்பே! வான்வளமே!
வாயால் புகழ்ந்து வயிறெரிந்து
நிரைத்த பல்லை நேர்காட்டி
நேர்ந்த நஞ்சை உள்வைத்து,
விரைத்துக் கேடு சூழ்வாரை
விரகால் உரவோர் அறிவாரே!

69. தமிழ்ப் புணர்ப்பு

அறிந்தால் தமிழின் புணர்ப்பருமை
அங்கைக் கனியாய் விளங்கிடுமே!
செறிந்த புணர்ப்பால் உயிர்மெய்யைச்
சேர்த்தோர் எழுத்தாய்ச் சுருக்கினரால்;
மறிந்தும் உயிரோ டுயிரெய்தின்
மடுத்தார் இடையே உடம்படுமெய்;
நெறியார் உயிர்முன் உகரமுதல்
நிலையா தோடும் நிலைவகுத்தார்.

70. பொருட்பகுப்பு

வகுத்தார் பொருளை அகம்புறமாய்;
வையம் அறியா வளத்தக்காய்!
பகுத்தார் திணையை ஒழுக்கத்தால்;
பாலின் பகுப்போ செவ்வியதாம்;
மிகுத்தாய் வார்க்கும் மேவரிய
மேலாம் நின்சீர் அறியாரோ,
தொகுத்தார் சொல்லின் ஈற்றெொலியால்
தோன்றும் ஆண்பெண் பாலமைப்பே!

71. எண்ணிலா இழப்பு

அமைந்தாய் கழகம், பிறமொழிகள்
அரும்பா முன்மைக் காலத்தே;
சமைந்தாய் மும்மைத் தமிழ்ப்பகுப்பே;
ஆன்ற மறையும் துறைபலவும்,
குமைந்த கடல்கோள் அழிப்புக்கும்
கொடியோர் செய்த அழிசெயற்கும்
அமைந்த இழப்பை யாரறிவார்?
அடைந்த தொன்றாம் நூற்றுக்கே

72. கேட்குஞ் செவிடர்

கேட்குஞ் செவிடாய்த் திரிவார்க்குக்
கேளாச் செவிடர் மிகநல்லார்;
ஆட்சிக் கிந்தி ஆங்கிலமாம்;
அசைக்கும் இசைக்குத் தெலுங்குமொழி;
கோட்டை சூழும் கோயிலுக்குள்
கோன்மை கொள்ள வடமொழியாம்;
வீட்டைக் கூட வேற்றுக்கே
விட்டுத் திரிய நாணாரோ?

73. இனமானம் பேணல்

நாணிப் போனான் "நீசோழன்
நல்கு மகனோ அல்லை"யென
பேணற் குரிய இனமானம்
பேணா மாக்கள், இனங்கெடுப்பார்
பூணு வலைக்குள் கிடந்தென்றும்
போகா அடிமை யாய்விட்டார்;
காணும் தெய்வத் தமிழன்னாய்!
காண்பார் என்றே இனமானம்?

74. எழுத்தில் இனப்பிரிவு

இனத்தைப் பிரித்தல் இழிவென்பார்;
இனத்துள் இனத்தைப் பிரித்துத்தம்
இனத்தை வளர்த்தல் குறியாகி
இயங்கு கின்றார்; கண்நேரே!
இனத்தை ஒலியால் செயல்நிலையால்
இயற்கை நெறியில் பிரித்தவளே!
இனத்தை உன்றன் எழுத்தினிலும்
இழிவாய் இணைத்தார் குலங்காப்பார்!

75. மொழிக் காவல்

காப்பார் நாட்டைப் படைகொண்டே;
காப்பார் உடலை மருந்தாலே;
காப்பார் வீட்டைப் பூட்டாலே;
காப்பார் உளத்தை நிறையாலே;
காப்பா தாரும் காவாத
கருத்தால் கயவர் பொருளாகிக்
கோப்புக் கெடுக்கும் நடைநஞ்சைக்
கொஞ்சித் திணிக்க அழிகின்றாய்!

76. பொருட்பெருக்கம்

“அழியாச் செல்வம் பெற்றாலும்
அமரர் இன்பம் உற்றாலும்
ஒழியாச் சுவையாம் உன்நூலை
ஓதும் சுவைக்கீ டில்லை”யென
மொழிந்தார் மொழியோ ‘கரும்பு மொழி’!
மூத்த நலத்தின் முழுவைப்பே!
கொழிப்பார் உன்றன் பொருட்பெருக்கம்
குறித்தார்† அரிக்கு நூற்றின்மேல்!

77. தாழ்மையுள்ள தமிழ் மாணவர்

மேனாட் டறிஞர் ஆய்வாலுன்
மேன்மை உலகம் அறிந்ததுவாம்;
ஈனாட் டறிஞர் இந்நாளும்
இழிவாய்த் தாழ்த்தித் தாழ்கின்றார்;
தேனார் தும்பிப் போப்பையர்
தேர்ந்த அன்பால் ‘தமிழ்மாணி’
ஆனார்; அம்மா! ‘மெய்கண்டார்’
ஆகும் பேறும் அரிதலவோ?

---

† அரி என்னும் சொல்.

78. பொதுமை நலம்

அல்லா வளமார் சீறாவும்,
அன்புக் கிறித்தின் மாலைகளும்,
கொல்லாச் சமண சாக்கியரின்
கொள்கை நூல்கள் பற்பலவும்
இல்லா மதத்தர் படைப்புகளும்
ஏற்றுப் பொலியும் எழிலன்னாய்!
எல்லாம் இயைந்த பொதுநிலையாம்
எழிலும் போற்றல் உன்சீரே!

79. தணிக்கை அமைப்பு

சீர்மை காக்கத் திரைத்தணிக்கை
செய்யும் குழுவும் உண்டன்றே!
நேர்மை அறியாக் கடத்துதலை
நேடிப் பிடிக்கத் துறையுண்டே!
ஓர்ந்து வரியேய்ப் புடையாரை
ஒடுக்கத் தக்க பிரிவுண்டே!
சேர்ந்து துணிந்துன் சீரழித்துச்
சிதைத்தல் தடுக்க அமைப்புண்டோ?

80. வளமார்ந்த திறவோர்

உண்டே பாலுண் பருவத்தே
உள்ளங் கவரும் பாவல்லார்!
உண்டே ஒழியா உடற்குரைக்கும்
ஒல்கா தமைந்த நாவல்லார்!
உண்டே அறியாப் பசியுற்றும்
உண்ட தோது மூதாளர்!
உண்டே உண்டே தொண்டொன்றே
உண்டென் றிருந்த முதுதொண்டர்.

81. தொண்டர் சீர்

தொண்டர் சீர்த்தி வழிவழியே
தொடுத்துப் பரவ ஒருமூவர்;
தொண்டர் அடியிற் பொடிசூடத்
துலங்கும் ஆழ்வார் பெருமகனார்;
தொண்டே வாழ்வாய்க் கொண்டுறையத்
தொண்டு கிழவர் நாவரசர்;
தொண்டு தொலைத்தே ஒன்பதனைத்
தொடுத்துக் கொண்டு வாழ்பவளே!

82. நட்பின் தலைப்பாடு

பவளம் முத்து பொன்மணிகள்
பல்வே றிடத்தில் பிறந்தாலும்
தவழும் அணியில் ஓரிடத்தில்
தயங்கி ஒளிர்தல் போலாக,
உவமை இல்லாச் சான்றோர்கள்
ஒன்றாய் இணைந்து வடக்கிருத்தல்
தவத்தால் உறுதி செய்தவளே!
தண்ணார் நட்பின் தலைப்பாடே!

83. தனித்தமிழ்

தலைப்பட் டாலைக் கடைப்படுத்தத்
தலைப்பட் டாரின் கரவுகளைத்
தலைப்பட் டறிந்த மறைமலையார்
தம்மைத் தந்து தனித்தமிழில்
நிலைப்பட் டாற்று தொண்டதனால்
நின்றன் சீர்மை விளங்கிற்றாம்;
விலைப்பட் டறியா ஒளிமுத்தே!
விடிவு குடையால் தடைப்படுமோ?

84. பாவகைகள்

தடைப்பா டற்ற ஒலிநயத்தாய்!
தாங்கு பாவோர் நான்குடையாய்!
அடையாப் பரிபா இசைகலந்தாய்!
அமைந்த வண்ணம் நூறானாய்!
நடைப்பால் தேவ பாணிச்சீர்,
நயங்கள் எல்லாம் ஒருங்கடைந்தாய்!
தொடைப்பால் உள்ளம் தொடுக்கின்ற
தோகை மயிலாய்த் தோன்றினையால்!

85. பாக்கள் பிறப்பிடம்

தோன்றும் மாட கூடத்தில்
துலங்கு நீயே வறுமைபிணி
ஊன்று குடிசை குப்பையிலும்
ஊற்ற மாகக் கிளர்ந்துள்ளாய்
ஏன்ற சிறையில் போர்க்கிடையில்
எழுச்சி கூர்ந்து மலர்ந்துள்ளாய்;
சான்ற உன்றன் நறும்பாக்கள்
சாரா இடமே இலைகண்டாய்!

86. பாடிய பெருமக்கள்

கண்டாய் புலவர் பாவொன்றோ?
காவல் வேந்தர் பாட்டுகளும்
மண்டோய் கலஞ்செய் குயமகளார்,
மாறாக் காவல் பெருமகளார்,
துண்டாய் அறுவைத் தொழில்வல்லார்
துலங்கு கொல்லர் வணிகர்பா
அண்டாத் தேனாய் அமைந்தவளே!
அறிவின் பொதுமை விளைநிலமே!

87. போர்க்கேடு

பொதுவாய்த் தமிழைக் காத்தாரும்
பொருதார் தம்முள் புலிபோல;
அதுவே இனத்தின் அழிவுக்கும்
ஆக்கம் கெடுக்கும் தீமைக்கும்
முதலாய் அமைந்த வினையம்மா!
முற்றுஞ் சாய்க்கும் பொதுத்தீமை
கதுவும் போதும் உணராதார்
கடைசி மட்டும் அழிவாரே!

88. மொழியால் ஒன்றுபடல்

அழிப்பார் அழிப்பை அழித்தற்கென்
றாகும் வழியும் ஒன்றம்மா!
மொழிப்பே ராலே ஒன்றாகி
முனைப்பு சிறுமை தன்னலங்கள்
ஒழித்தே கூடி, ஒருகருத்தாய்
ஒலித்தால் தெற்கு மேற்கென்ன?
விழிப்பாம் வடக்கும், உண்மையினை
வினங்கு வாரோ தடிப்புடையார்!

89. சொல் வளம்

உடையாய்! உன்றன் சொல்வளத்தை
உரைக்க ஒருவர்க் காவதுவோ?
படையாய் படையாய் படைபடையாய்ப்
பல்கும் சொற்கள் ஒருவேரில்;
அடையார் ஓரோர் எழுத்ததுவும்
அரிய சொல்லாம் சொற்றொடராம்;
நடையால் காணப் பிறமொழிகள்
நண்ணாப் பொருளீ தாமன்றோ!

90. எதிர்கால ஏற்றம்

ஆமாம் ஒருநாள் உலகெல்லாம்
ஆய்ந்துன் வளத்தைக் கூட்டுண்ணல்;
ஆமாம் உலக மன்றத்தின்
ஆணை குறளாம் என்றாதல்;
ஆமாம் உலக முதல்மாந்தன்
அசைத்த மொழிதான் நீஎன்னல்;
ஆமாம் ஒருநாள் குமரிநிலம்
ஆதி மாந்தன் நிலமென்னல்!

91. சொற்பொருள்

அல்லில் மலர்வ தல்லிமலர்;
அன்றி ஒன்றல் அன்பாகும்;
பல்லின் நீட்சி பல்லிக்கே;
பலவாய் அமைந்த பல்லாகும்;
புல்லென் றியைதல் புல்லுதலாம்;
புல்லா தகறல் புலவியதாம்;
சொல்லில் பொருளை வைப்பாக்கிச்
சொல்லும் பெருமை நின்சொல்லே!

92. மணியும் பதரும்

சொல்லென் றுரைக்கும் சொல்லுக்குச்
சொல்லும் பொருளோ நெல்லாகும்;
நெல்லின் மணிதான் இல்லென்றால்
நெல்லென் னாமல் பதரென்பார்;
சொல்லில் பொருள்தான் இல்லென்றால்,
சொல்லும் பதரே; மொழிபதரே;
வல்ல வகுப்பை அறியாதார்
வகுத்தார் வாளா இடுகுறியே!

93. அறிதோறும் அறியாமை

குறித்த மூலப் பொருளறியாக்
குறையும், முயற்சி மேலேயாம்;
"அறிய அறிய அறியாமை
அறியத் தோன்றும் எனலறிந்தால்,
அறிவுக் குறையை மொழிமீதில்
அறியா தேற்றார் அறிவுடையார்;
அறிய வண்டித் தடங்காண்பார்;
அறுகால் வண்டுத் தடங்காணார்!

94. பேணி வளர்க்காமை

காணார் கலைச்சொல் ஆக்கத்தை;
காணார் கல்வி ஊடகமாய்;
காணார் அரசின் நடவடிக்கை;
காண்ப வெல்லாம் வாய்வேட்டே!
பேணா தொதுக்கல் தம்மாட்டை!
பேணிக் காத்தல் அயல்மாட்டை!
நாணார் செய்கை ஈதம்மா!
நயப்பக் காட்டல் வாக்குக்கே!

95. புதுமை வளம்

வாக்குத் திறத்தின் நயங்காட்ட
வந்தார் அண்ணா, திரு.வி.க.;
பூக்கும் இனிய புதுமலர்கள்
புனைய வந்தார் பாரதியார்;
தேக்கும் தேனாய் நினைப்பாடத்
தேடி வந்தார் பாவேந்தர்;
ஆக்கும் அருமைப் பாடெல்லாம்
அமைந்தாய் அருவி மலையூற்றே!

96. பலதிறப் பாடல்கள்

ஊற்ற மிக்க அருவியென
ஒழுகும் பாடல் வளமுடையாய்!
ஏற்றப் பாட்டுக் கெதிர்ப்பாட்டோ
இல்லை என்ன நீசிறந்தாய்;
போற்றும் நாட்டுப் பாட்டுகளில்,
பொலியும் ஆட்டப் பாட்டுகளில்,
தோற்றும் இன்பக் கூட்டமுதம்
தோயும் கிள்ளாய்! துணைநீயே!

97. ஆண் பெண் இணை

துணையை ஒப்புத் தரமாக்கித்
துலங்கும் தலைவன் தலைவியென
இணைமை சுட்டி இனிப்பவளே!
இயையும் காதல் வாழ்வினிலே
பிணையும் ஆண்பெண் நலப்பாட்டைடப்
பேசும் முகத்தால் பெய்பவளே!
மணையிற் பஞ்சாய் மறிவார்க்கும்
மாறா மகிழ்வு சுரப்பவளே!

98. அருமைப் பாடுகள்

சுரத்துப் பாலை வாழ்வினையும்
சுவைக்கச் சொல்லும் திறம்வல்லாய்!
வரத்து மொழியின் சொல்லெழுத
வரம்பு வைத்த வனப்புடையாய்!
உரத்திற் கடியிற் செல்லாமல்
ஒலிக்க வல்ல ஒலிச்சீராய்;
கரக்குள் செல்வப் பெருக்குடையார்
கருதார் உன்னை வளர்த்திடவே!

99. மொழிபேணார் நிலை

கருதி உன்னை வளர்க்காதார்
கயமைச் செல்வம் கரிக்கொள்ளை;
குருதி ஓட்டம் இல்லாரே,
கூறும் உன்மேல் பற்றில்லார்;
பருதி ஒளியைப் பாராரே,
பயின்று நின்னைப் பரப்பாதார்;
மருதி போல உனைக்காக்க
மாய்ந்தார் பலரால் அறிவாயே!

100. வாழ்வார் தகவு

வாயே குறியாய் வாழ்வோர்கள்,
வாயார் உன்றன் அருளெய்தல்;
காயே என்று நினைப்போர்கள்,
கனியார் நின்றன் பண்பாட்டில்;
பேயே என்று வாழ்வோர்கள்
பேரா இன்பம் அறியாரே;
தாயே! அமுதத் தமிழ்மொழியே!
தமியேன் கண்ணே! கண்மணியே!

---

2. நாடும் மொழியும்

நம்மிரு கண்கள்

இரா. இளங்குமரன்

நூல் வருமுறை

"தமிழ்மொழி வாழ்ந்தால் தமிழகம் வாழும்" எனும் உயிர்ப்போடு எழுந்தது தமிழ்க் காப்புக் கழகம். "தமிழில் பேசுக; தமிழில் எழுதுக; தமிழில் பெயரிடுக; தமிழில் பயில்க" என்னும் நான்மணிகளைச் செயற்படுத்தும் செம்மாப்புடன் நான்மாடக் கூடல் திருநகரில் 6.8.'62 இல் எழுந்தது தமிழ்க் காப்புக் கழகம். அதன் தலைவரும் நிறுவனரும், பேராசிரியர் சி. இலக்குவனார். யான் அதன் பொதுச் செயலாளன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், முனைவர் கலைஞரவர்கள், மொழி ஞாயிறு பாவாணரவர்கள், முனைவர் மு.வ. அவர்கள், முனைவர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் முதலாகிய தமிழ் நலம் நாடும் பெருமக்கள் அவ்வப்போது பங்கேற்றுச் சிறப்பித்தனர்!

இந்நாளைப் பேராளர்களும் பெருமக்களுமாகிய நாவரசர் கா. காளிமுத்து, பாவலர் நா. காமராசன், சட்டமன்ற உறுப்பினர் முத்தையா, பேராசிரியர் வீ. முத்துசாமி, பேராசிரியர் முருகபாரதி ஆகியோர், அந்நாளைத்தமிழ்க் காப்புக் கழகத் தூண்கள், உறுப்பாளிகள், அரவணைப்பாளிகள், தொண்டின் உறைப்பாளிகள்!

தமிழ்க் காப்புக் கழகப் பணிகள் சீரியன. இலக்கியம், இலக்கணம், வரலாறு, மொழியியல் இவற்றில் தேர்ச்சியும், பயிற்றுதலில் திறமும், தனித்தமிழ் நாட்டமும் உடைய பேராசிரியர்கள் பதினறுவர் எத்தகு கைச்செலவும் எதிர் நோக்காமல், தமிழ்தியமே ஊதியமாகத் தம் கைச்செலவு செய்து

சொண்டு வந்து தமிழ் வகுப்பு நடாத்தினர். ஒவ்வொரு நாளும் வகுப்பு; ஒவ்வொரு கிழமையும் பொழிவு; ஒவ்வொரு திங்களும் விழா! அவ்வப்போது அறிக்கைகள், சுவரொட்டிகள், வேண்டுகோள்கள், ஊர்வலங்கள்!

தமிழகத்தின் பல்வேறு பெருநகரங்களிலும் தமிழகர்கூடந்து தமிழர் வாழும் பகுதிகளிலும், தமிழ்க் காப்புக் கழகக் கிளைகள் தோன்றி நற்பணியாற்றின. தமிழ்க் காப்புக் கழகம் இந்தி யெதிர்ப்புப் பாசறையாக வேண்டிய கட்டாயத்தை 1965 இல் அரசு உண்டாக்கியது. தமிழ்க் காவலராகத் திகழ்ந்த பேராசிரியர் இலக்குவனார் இந்தி யெதிர்ப்புப் படைக்குத் தளபதியானார். அவர்தம் முழக்கத்தை வெளியிடும் போர்ப்பறையாகக் கிளர்ந்தது 'குறள் நெறி' இதழ். அந்நாள் பேராயக் கட்சி ஆட்சியாளர்கள் அஞ்சும் அளவுக்கு நிமிர்ந்து நின்றார் பேராசிரியர். அவரும் அவரைச் சார்ந்து நின்றவர்களும் அரசினர் அலைக் கழிப்புக்கு ஆட்பட்டனர். ஒற்றர் கண்காணிப்புக்கு உட்பட்டு இயங்கும் ஒருநிலை உண்டாயிற்று.

'அமைச்சர்களைக் கொல்லுதற்கு முயற்சி' என்பது முதலாகப் பேராசிரியர் மேல் பதினான்கு குற்றங்கள் சாற்றப் பெற்றன. உறையுளையும் குறள்நெறி அச்சகத்தையும் புலனாய்வு செய்தனர். சில தடயங்கள் உள்ளனவாகக் கூறிப் பொய் வழக்குச் சுவடித்தனர். உண்மைக்குப் புறம்பான குற்றச் சாட்டினை உறுதி யாக எதிர்த்தல் தம்கடன் என்று கொண்டு. ஊதியம் நோக்காமல் எவரும் வந்து தம்மை வேண்டிக் கொள்ளாமல் - திருமிகு தருமராசு சந்தோசம், திருமிகு பி.எசு. இராமசுப்பிரமணியம் முதலிய வழக்கறிஞர்கள் முப்பத்தாறுபேர் பேராசிரியர்க்காக வழக்காட முன்வந்தனர். எங்கும் காண்டற்கரிய காட்சியாயிற்று.

ஒவ்வொரு கெடுவிற்கும் ஒன்பதின்மரோ பதின்மரோ தத்தம் ஊர்திகளில் வந்து வழக்காடினர். 'திருநகரை விடுத்து வெளிச் செல்லக் கூடாது' என்னும் ஆணையால் பணிக்களம் முதலிய எவற்றுக்கும் செல்லாவண்ணம் அரசினர் தகைந்தனர். ஒரு திங்களும் ஒரு கிழமையும் சென்றன. அதன்பின்னர், 'எப்பொழுதும் சிறைப் படுத்தலாம்' என்னும் ஆணையுடன் விடுதலை வழங்கினர் சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய மணிமேகலையார் மாண்பு எங்கே! அறக்கோட்டத்தைச் சிறைக் கோட்டமாக்கிய இவர்கள் சிறுமை எங்கே!

கோடை விடுமுறையில் தலைநகரை நோக்கிய தமிழ் உரிமைப் பெருநடைத் திட்டம் ஒன்றை உருவாக்கினார் பேராசிரியர். கல்வித்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை, கலைத் துறை, சமயத்துறை ஆகிய அனைத்துத்துறைகளிலும் தமிழ் உரிமையை நிலை நாட்டும் நன்னோக்குடன் தொடங்கப்பட்டது தமிழ் உரிமைப் பெருநடை. தென்னங் குமரி தொடங்கிச் சென்னையில் நிறைவுறும் பெருநடைத் திட்டமாக உருப்பெற்றது. உயர்நிலைப் பள்ளிகளில் ஒரேகாலத்தில் தமிழைப் பாட மொழியாக்கியதுபோல் கல்லூரிகளிலும் ஒரே சமயத்தில் எல்லாத் துறைகளிலும் எல்லா நிலைகளிலும் தமிழைப் பாடமொழியாக்க வேண்டும் என்று அரசினரையும் துணை வேந்தர்களையும் வலியுறுத்துதற்குக் கிளர்ந்த உணர்வை, வெளிப்பட விடாமல் ஒடுக்க முந்து நின்றது மும்மொழித் திட்டத்தை மூச்செனக் கொண்ட அந்நாள் அரசு. பெருநடை தொடங்குவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னரே அதாவது 1-5-65 இல்-பேராசிரியரைப் பாதுகாவல் குற்றவாளியாக்கி இரவோடு இரவாக வேலூர்ச் சிறைக்கண் சேர்த்து, வெற்றிக்கொடி நாட்டியதாக விம்மித

முற்றது. தாய்த் தமிழைக் கட்டிக்காக்கத் துணிந்த ஒரு மகனை, அத்தாய்த் தமிழ் மகனே சிறைப்படுத்திய வன்கொடுமை ஒரு 'வரலாற்றுப் புரட்சியே' யாம்.

'தமிழ்த்தாய் சிறையில்' என்று பேராசிரியர் சிறைக்குள் சிக்கிக் கிடக்கும் நிலையை, நாளெண்ணிக் காட்டிப் பெருமை பெற்றன முரசொலி முதலிய நாளிதழ்கள் எத்தகைய வழக்குப் பதிவும் இல்லாமல் மூன்றரைத் திங்கள் சிறைக்கண் வைத்தது அரசு. அதனை விட்டு வெளியேறுங்கால் வேலையையும் பறித்துக் கொள்ளுதற்குரிய ஏந்துகளை யெல்லாம் முனைப்புடன் தீட்டியும் வைத்திருந்தது. தன்னைக் காத்துக்கொள்ள விரும்பிய கல்லூரி நிறுவனம், தமிழைப் பழிவாங்கிக் கொண்டது! ஆம்; தந்நலங் கருதாத் தமிழ்த் தொண்டுக்குத் தகவான பரிசுகள் அடுக்கடுக்காய் வந்தன! இச் சூழலில் முகிழ்த்ததே 'நாடும், மொழியும் நம்மிரு கண்கள்' என்னும் இச்செய்யுள் நாடகம்!

'நாட்டுத் தொண்டரை மதிக்கும் அரசு, மொழித் தொண்டரை மிதிக்கும் மிதி என்னே! என்னே!' என என் உள்ளம் நைந்தது! கடன் கொண்டும் கடன் செய்யும் கடமை வீரரைத் தாங்குதலைக் கடனாகக் கொள்ள வேண்டிய அரசு, தாக்குதலைக் கொள்ளும் தரக்கேடு என்னே! என்னே!' என என் நெஞ்சம் ஏங்கியது! நாட்டுத் தொண்டுக்குச் சேரனையும் மொழித் தொண்டுக்குக் கீரனையும் படைத்து இருவரையும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் ஆக்கி, அவர்கள் தாய் தந்தையரை மேடைக்கு ஏற்றி ஆடவிட்டது! நாடகக் கருவது? 'நாடும் மொழியும் நம்மிரு கண்கள்'! இதுவே முடிமணி ஆயிற்று!

ஏறத்தாழ இருபது ஆண்டுகள் பேழைக்குள் ஒடுங்கிக் கிடந்த படைப்பின் பயனைப் பைந்தமிழ் உலகுக்கு முதற்கண் படைத்த படைப்பாளர் திரு. நா. எழில்-மகிழ்நர் ஆவர். அவர் அறிவர்; அரிய செறிவர்; கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி அன்ன தொகுப்பர்; தனித்தமிழ்த் தொண்டர்; மொழி ஞாயிறு பாவாணர்மேல் மட்டற்ற ஆர்வலர்; அணுக்கர்! பாவாணர் பெயர் விளங்கும் எம் ஆய்வு நூலகத்தை வளர்த்தலில், புரவாண்மை மீக்கூர்ந்தவர்; அவர்க்கு நெஞ்சார்ந்த நன்றி யுடையேன். முதற்பதிப்பு ஆண்டு 1984. இப்பதிப்பு தவச்சாலை வழியே வெளிப்படுகின்றது. இதன் கொடைஞர் மலையகத் தோன்றல் திருத்தகு ஆ. மாரியப்பனார், வெற்றிச் செல்வியர் ஆவர்.

இரா. இளங்குமரன்

15.8.97

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி 620 101
தமிழ்நாடு

நூல்வரு நிலை நுவலல்

நேரிசை ஆசிரியப்பா

கற்பனை நாடகக் கதையெனக் கருதுவர்
கற்பவர்; ஆனால் கற்பனை சிறிதே!
பாழ்மனச் செருக்கால் பாகித் தானியர்
வீழ்ந்திட எழுந்த வெறுத்தகு போரில்
இந்திய வீரர் இணையறச் செய்திறம்
முந்திய சேரன் பெயரால் முகிழ்த்தன;
சங்கக் கீரரே சால்புறத் தோன்றி
இங்குளார் என்ன இருந்திடும் அறிஞர்,
நற்றமிழ் மேனிலை நானிலம் அறிந்திட
உற்றநல் உளத்தால் தொல்காப் பியத்தை
ஆங்கில மொழியில் பாங்குறப் பெயர்த்தும்,
காப்புக் கழகம் யாப்புறக் கண்டும்,
நாளெலாம் குறள்நெறி நடக்கக் குறள்நெறித்
தாள்களைத் தந்தும், தாய்த்தமிழ் மொழியே
பல்கலைக் கழகப் பயிற்று மொழியென
மல்குக வென்று மணிநடை தொடருமுன்
சிறையகம் சேர்ந்தும், செந்தமிழ் பயிற்றும்
பேரா சிரியப் பெருநிலை இழந்து
நேராத் துயரம் நேர்ந்த காலையும்,
கொள்கைக் குன்றமாய்க் குலையா தோங்கி

நின்றசீர் இலக்குவர் நிலைத்தார் கீரராய்!
ஒன்றிய சேரனும் கீரனும் ஒருகுடிப்
பிறப்பெனக் காட்டிப் பெறற்கருந் தாயரைச்
சிறப்புற மன்றில் செலுத்திய ஒன்றே
கற்பனை யாகக் கலந்தது வாகும்;
நற்றமிழ்த் தாய்தரு நண்பீர்!
எண்ணிநீர் தெளிமின். இன்றமிழ் நிலையே!

காட்சி உறுப்பாளர் :

காளையப்பர் - முதுகுடிப் பிறந்த மூதாளர்.

புகழம்மை - காளையப்பர் மனைவியார்.

சேரன் - நாட்டுத் தொண்டன்.

கீரன் - மொழித் தொண்டன்

(இருவரும் முன்னவர் மைந்தர்)

அழகனார் - தமிழ்நாட்டு அமைச்சர்.

மற்றும் வடநாட்டவர் ஒருவர், காவல் துறையினர், வரவேற்பாளர், இசைஞர், அவையோர் ஆயோர்.

பிற குறிப்புகள் :

இடம் : ஊர்ப் பொதுமன்றம்.

மேடை : விழாக் கோல மேடை.

பொழுது : முன்னிரவு.

நாடகம் இயலும் பா

நேரிசை ஆசிரியப்பா.

நூல்

நாடும் மொழியும் நம்மிரு கண்கள்

வாய்த்த வரவேற்பு

"வருக! வருக! வளமார் வீரத்
திருமகன் ஒருவனைப் பெரும்புகழ்ச் செல்வனைக்
காவல் தலைவனைக் கடமைக்(கு) உறையுளைப்
பாவப் படைகளைப் பதைபதைத் திடச்செய்
பைந்தமிழ்க் காளையைப் பாவலர் பாடும்
செந்தமிழ் ஏற்றைச் சீரிய நம்பியைத்
தந்தநற் றந்தையீர்! வருக! வருக!
மூந்தையர் தவப்பயன் முழுதுரு வருக!
பெற்றவர் எல்லாம் பெற்றவர் தாமோ?
பெற்றவ ருள்ளே நும்போல் பெரும்புகழ்
பெற்றவர் எவரே? பெருந்திறல் காளையைப்
பெற்றத னாலே பெற்றவர் ஆனீர்!
நற்றவர் ஆனீர்; நயத்தகு பேறுகள்.
உற்றவர் ஆனீர்; மற்றவர் எவரே
பெற்றனர் ஐய! இத்தகைப் பேறுகள்?

வருக வருக வண்டமிழ் வணக்கம்
இருகை கூப்பி ஏற்றனம் நும்மை”
என்றுரை யாடி நன்றுரை யாடி
ஒன்றிய வீரத்(து) உயர்குடித் தோன்றல்,
பாண்டிய வேந்தனே ஈண்டினன் என்னக்
காண்டகு சீர்த்திக் காளை யப்பரை
வரவேற் றுவந்தனர், வரவேற் பினரே!

காளையப்பர் களிப்பு

ஏர்ப்பணி புரியும் ஏந்தல் அவரும்
போர்ப்பணி புரியும் புலியினைப் பெற்றதால்
ஊரும் உறவும் ஒருக்கணித் தேத்த
நாடும் நகரும் நன்கனம் வாழ்த்த
ஆட்சி யாளரும் அமைச்சரும் அணுகிப்
பேட்டி கண்டு பெருமிதம் எய்தச்
செய்தித் தாளினர் செவிகளைக் கூர்ப்பாய்
வைத்தவர் பொழிவதை வரைந்து மகிழ
நிழற்படம் பிடிப்பவர் முழுத்திறம் காட்டி
அழகழ கமைப்பினில் அவர்படம் பிடிக்க
உலகத் துவப்பெலாம் ஒருரு வாகி
இலகுவ தென்ன ஏறினர் மேடை;

மேடையின் மேனிலை

வானமே இறங்கி வந்ததோர் வகையென
மேனிலைக் கட்டு மேடையில் பொலிய,

விண்மீன் குழுமமே விரும்பி வந்ததாய்
ஒண்மின் விளக்குகள் ஒளிர்ந்து விளங்க,
குவியிதழ்த் தாமரைக் குழுமமே என்ன
அவிரொளிக் குவிவிளக்(கு) அழகுறத் திகழ,
நீள்குழைக் குள்ளே ஞாயிறும் உளதென
வாளொளி பரப்பும் குழைவிளக் கொளிர,
ஓவியத் திரையும், பூவியற் றொங்கலும்,
மாவிலைத் தொடலையும், மலர்நிறை குவளையும்,
வாழையும் கமுகும் வளர்குலை ஈந்தும்,
சூழவும் அமைந்த சுடரொளிப் பந்தரில்
எழுபது யாண்டின் எழுச்சி இளைஞர்
காளை யப்பர் களிப்புடன் அமர்ந்தார்;

மேடையில் இருந்தோர்

காவல் துறையொடு கல்வித் துறையும்
ஆவலில் தாங்கிய அமைச்சர் அழகனார்
பாடுயர் இருக்கையில் பீடுற இருந்தார்;
நாடிய நோக்கால் நடுவண் அரசினர்
அனுப்பிய வாழ்த்துடன் அணுகிய வடவர்
ஒருபுறம் இருக்க, ஒருபுறம் காளை
யப்பரும் இருந்தார், அகமகிழ் வுற்றே;

மாலைசூட்டலும், விழாத் தொடக்கமும்

எப்பொழு(து) அமைச்சர் எழில்விழி நோக்கு
விழுமென எதிர்பார்த் திருந்திடும் மேல்நிலைத்

தொழும்பர், மேடையில் தொடுத்தனர் நிற்கத்,
தோள்முதல் தாள்வரைத் தொங்கும் நறுமண
நீள்பெரு மாலைகள் நிரலே சூட்டினர்;
இன்னிசை இசைத்தனர் இளையர் இருவர்;
மின்னென ஒருவர் மேடையில் தோன்றிக்,
'கடம்பரை அழித்த கன்னித் தமிழன்
வடவரை வணக்கிய வண்டமிழ்ச் சேரன்,
செங்குட் டுவனே இங்கொரு பிறப்பாய்
வந்தனன் என்ன வந்துள சேரன்,
காளை யப்பர் தந்துள காளை,
ஆற்றிய போர்த்திறம் அமைச்சர் அழகனார்
சாற்றுவார் என்றார்; அமைச்சரும் எழுந்தார்.
அமைச்சர் உரையை அப்படி, அப்படி
அமைத்திலம்; தூய்தமிழ் அவர்மொழி யன்றே!

அமைச்சர் முழக்கம்

"ஈடிலாத் துணிவால் நாடு புகழ்ந்திடும்
பீடமை சேரனைப் பெற்றருள் காளையீர்,
வீரத் தொல்குடி விளங்கிய சான்றீர்,
ஆண்மைக்(கு) உறையுளாய் அமைந்த இளையீர்,
மாண்புத் தாயீர், மலர்முகக் குழவிகாள்
சேரன் காட்டிய வீரத் திறத்தினை
யாரே கூறுதற் காகும்! அரிதே;

வீழ்ந்தது வானவூர்தி

“எல்லைக் காவலில் இருந்தனன் சேரன்;
தொல்லைப் பகைவரோ நற்பொழு திதுவெனத்
தேர்ந்தனர்; வான வூர்தியில் பறந்தனர்;
கூர்ந்து நோக்கினான் கோட்புலிச் சேரன்;
‘எல்லை கடப்பதோ எதிரியின் வூர்தி?
நல்ல செயலிது! நல்ல செயலிது!
வெல்லமோ தேனோ அல்லவென் உயிரே!
வல்லஇப் பேறும் வாய்க்குமோ மீண்டும்?
மானம் போயதிவ் வூர்தி போயதால்!
நானமைந் திருப்பது நகைப்பென நகைத்துத்
தானோர் வூர்தியில் தாவினான்; தாவும்
மீனெனத் தாவி மேலெழுந் துயர்ந்தான்;
காலனும் கலங்கக் கலக்கும் பேய்வாய்க்
குண்டினால் பேசினான்; கண்டவர் அயர்ந்தனர்;
வெடித்தது குண்டு; வீழ்ந்ததே வூர்தி;
துடிப்புடன் சாய்ந்தான் துணிவுடன் பறந்தோன்;
இம்முறை தானோ இப்படி அழித்தான்?
மும்முறை அழித்தான் முதிர்பெருந் திறத்தால்!
மஞ்சிடை மறைந்தும் மதியினைத் தழுவியும்
அஞ்சினர் செலினும் பஞ்செனப் பறத்தி
வீழ்த்தினன் பகையை; வாழ்த்தினர் உலகோர்;
வாழ்த்துவம் நாமும் ‘வாழிய சேரன்;’

முழுப்படை அழிப்பு

“மற்றொரு நிகழ்ச்சி உற்றது கேண்மின்!
பகைப்படை வருவதைப் பார்த்தனன் சேரன்;
நகைத்துளங் கொண்டு நயமுறப் பின்னே
நகர்ந்து வழிவிட நற்குறி காட்டினான்;
பகைவரோ தாக்கும் படைகள் இன்மையால்
ஊக்கமாய் ஏகி உட்புகுந் தார்த்தனர்;
நோக்கிய காலமும் இடமும் வாய்க்கவே,
பின்னும் முன்னும் பக்கமும் சுற்றி
‘என்ன சுழலென இன்னல் எய்திட
ஏறவிட் டேணி வாங்கிய கதைபோல்
சீறி யழித்தான்; செம்மையாய்ச் சிதைத்தான்;
சிக்கிய ஊர்திகள், செய்திறக் கருவிகள்
மிக்குயர் படைகள் மிகப்பல வாமே!”

உடைத்தது பாலம்

“இந்நிலை இன்னலை எதிரிகள் எய்த
இன்னொரு செய்தி ஏற்றான் ஒற்றரால்,
தம்படை அழிந்த தாழ்நிலை அறிந்து
வெம்பிய பகைவர் வேறுமோர் படையைப்
பதிலடி கொடுக்கப் பாய்ச்சலில் விடுத்தனர்;
அதிர்விலாச் சேரன் அச்செயல் அறிந்ததால்
நூலறி புலவனாய் நுணுக்கமாய் எண்ணிப்
பாலம் ஒன்றினை வெடியால் தகர்த்தனன்;

அவ்வழி யன்றி வருவழி யறியார்.
வெவ்விழி விழித்து வெறுவழி பார்த்தனர்;
திரும்புவ தன்றி விரும்புவ தில்லென
வந்த வழியே நொந்து திரும்பினர்;
குருதி வெறியராம் கொடும்பகை யாளிகள்
பருதிமுன் பனிபோல் ஒழிந்திடச் செய்த
சேரன் சீர்த்தியே சீர்த்தியாம் கண்டீர்!"

சேணறிவினையச் சிதைத்தல்

"இன்னுமோர் இனிய செய்தியை இவ்விடம்
பன்னி முடிப்பேன்; அன்புறக் கேண்மின்!
நெஞ்சமே உயிர்களின் இயக்க நிலைக்களம்;
நெஞ்சினை ஒப்பதாம் நிகழ்போர் நாளில்,
*சேணறி நிலைக்கள மாணுறும் அமைப்பகம்;
மாமுகில் மறைப்பினும் காரிருள் கப்பினும்
ஓரஞ் செலினும் ஒளிந்து மறையினும்
ஊர்தி ஈதென உடனே காட்டி
வருவழி தொலைவு விரைவு ஆயவை
தெளிவுறச் செய்யும் ஒளிவளர் நிலையம்
*சேணறி நிலையம்; காணுமோர் ஊர்தி
நம்மவர்க் குரியது; வேற்றவர்க் குரியது;
இன்னதே குண்டுகள் ஏவும் இலக்காம்,
என்பவை எல்லாம் முன்புறக் காட்டி

---

* இரேடார்

வென்றியை நாட்டும் விழுமிய நிலையம்,
நெஞ்சகம் போல்வ தென்னின் தவறோ?
நங்கள் வீரன் நயத்தகு சேரன்
எங்கணும் கண்ணாய் எதிரிகள் நிறுவிய
சேணறி நிலைக்களச் செவ்வியை அறிந்து
மாணுற வானில் மற்றதை மறைத்துப்
புக்கொரு குண்டால் பொடிப்பொடி யாக்கிச்
சிக்கலைத் தீர்த்தான்; சிதைவால் பகைவர்,
சிக்கலில் மாட்டிச் செய்திறம் அழிந்தார்;
நாடெதிர் நோக்கிய நடுக்கம் தீர்ந்திடக்
கோடி வீரரும் ஈடோ எனும்பே(று)
எய்தினன்; செயற்கருஞ் செய்கையால் சிறந்தான்

சேரனே செம்மகன்

இம்மகன் தானே செம்மகன்; நாட்டின்
நன்மகன்; காலம் நல்கிய பொன்மகன்;
செரனைப் பெற்றதால் 'இந்திய' அன்னை
விம்மிதம் கொண்டாள்; வீரன் வாழ்கென
அமைச்சர் அமர்ந்தார் ஆர்ப்பொலி யோடே

புரியாப் புகழுரை

வடக்கிருந் தடுத்தவர் தொடங்கினார் பேச்சை;
புரியா இந்தியில் விரிவாய் விளக்கினார்;

அனையோர் அவலம்

“புரியா மொழியில் புகல்வதும் சரியோ?
புரியும் படியாய்ப் பேசுக; இலையேல்
புரிந்தவர் அதனை மொழிபெயர்த் திடுக
வேற்றவர் நம்மவர் ஆற்றலை உரைப்பதை
ஏற்றிடும் ஆவல் மிக்குள “தென்றார்.”

அமைச்சர் நிலையும் அறிவுரையும்

அமைச்சரும் இந்தியை அறியார்; அவரோ(டு)
அமைந்துள பிறரும் அறியார்; எனினும்,
புரியா தென்பது புகழிலை என்றே
புரிவதாய் நடித்தனர்; பொழிவதை அறிந்து
தெளிந்தவர் போலத் திருக்கண் நோக்கினர்;
களிமகிழ் காட்டினர்; கையொலி செய்தனர்;
மீண்டும் மற்றதை மொழிபெயர்த் துதவ
வேண்டினர் அனையோர்; அமைச்சர் எழுந்தார்;
“சேரனின் செய்கையை நேரிடைச் சென்று
சீருறக் கண்டவர்; ஆதலால், சிறப்பாய்ப்
புகழ்கிறார்; புகலுவ ததுவே” என்றார்.

அனையோர் அறிக்கை

“புகழ்வதோ இகழ்வதோ எதுவும் அறியோம்;
மொழிபெயர்த் தாக்க வழிவகை இலையோ?

அவர்மொழி அறிந்தவர் எவருமே இலரோ?
அமைச்சரும் அறியார் பிறரும் அறியார்;
சுமைசுமை யாகச் சொல்லுவார் திட்டம்;
மும்மொழி மும்மொழி என்றே முழங்கி
நம்முயிர் வாங்குவார்; நன்றிது; நீவிர்.
இந்தியை அறியீர்; வந்தவர் ஆங்கிலம்
அறிவார்; அதிலவர் மொழிந்தால் நீவிர்,
அறிந்தது பெயர்த்த லாகுமே; ஈங்கிவர்
உரைப்பதை அறியவே உரைத்தேம்" என்றார்.

அமைச்சர் அறவுரை

"அயலார் மொழியிலோ அவருரை யாற்றுவார்?
பகர்ந்தீர் நன்றாய்! பார்த்தவர் என்சொலார்?
அமைதி காக்கவும்" என்றார் அமைச்சர்.

அவையோர் விளக்கம்

"எமைஏ மாற்றுதல் வேண்டா; நீவிர்
ஈங்குள போதே இருவரும் கூடி
ஆங்கில மொழியில் பேசுதல் கேட்டோம்;
அப்பொழு தெல்லாம் அயல்மொழி என்னத்
தப்பிய தென்ன? தனிப்பே ரமைச்சீர்!
ஆங்கிலம் அயல்மொழி என்ப துண்மையே!
ஆங்கது போல இந்தியும் அயல்மொழி
என்பதைத் திண்ணிதில் அறிந்தே தெளிக;

"மன்பதைக் கெல்லாம் தாய்மொழி ஒன்றே
தன்மொழி, மற்றவை அயல்மொழி" என்றனர்.

அமைச்சர் நோக்கறிந்த காவலர்

எதிரிட் டுரைப்பதை ஏறிட் டுறுத்தார்;
குதிங்கால் உயர்த்திக் குத்தி யெழுந்தார்;
எள்ளும் கொள்ளும் எளிதாய் வெடிக்கக்
கொள்ளும் அமைச்சர் குறிப்பை அறிந்த
காவல் அலுவலர் கடுகடுப் போடே
ஏவல் படையர் சூழ மேடையில்
ஏறினார்; "அமைதியை மீறிய போர்களை
வெஞ்சிறை சேர்த்தலே வேண்டிய கடமையாம்;
அஞ்சினர் அல்லர்; ஆர்த்தனர்" என்றார்.

அமைச்சர் அடக்குரை

அறிவுறும் அமைச்சர் செறிவுற அமைந்து,
"சிறையகப் படுத்தலே செய்கடன்; எனினும்,
நடுவர சனுப்பியோர் நம்மிடை யுள்ளார்;
கொடுநிலை யரசெனக் குறிக்கோள நேரும்;
குறிக்கொளும் செய்தியைக் கூறவும் நேரும்;
திறனிலா அரசெனத் தெரியவும் நேரும்;
ஆகவே, அவருரை யாற்றி முடித்ததும்
ஏகுவார்; ஏற்பன செய்க; எதிர்ப்பவர்
பெயர்களை நினைவுடன் பேணி வெவ்வே(று)

இயல்களில் வழக்குகள் ஏற்றி வருத்துக;
மீன்குஞ் சறியா நீத்தும் உண்டோ?
யான்சொல் லியதோர் குறிப்பே யாகும்”
என்றார்; அதை ‘நன்’றென்றார் காவலர்;

விழா நிறைவு

குன்றாக் கொள்கையைக் குமைக்கக் குள்ள
நரிச்செயல் நாடிய நயமீ திருக்க
விரித்துரை இந்தியார் விரைவில் முடித்தார்;
பரிசுடன் விருதுகள் பாராட் டிதழ்கள்
வரிசையாய் வழங்கினார்; விரைவுடன் நகர்ந்தார்.

தடியடித்திட்டம்

எரிமலை போல எழுந்தார் அமைச்சர்;
நாய்வால் போல ஏறிய மீசைப்
பேய்வாய்ப் பேரொலிக் காவலர் நிமிர்ந்தார்;
இட்ட கட்டளை இயற்றிடத் தடியைத்
தொட்ட கையினர் துடிப்புடன் நின்றனர்;
ஒங்கொலி எழுந்தது நீங்கிலர் எவரும்;

புகுந்ததோர் புலி

ஆங்கொரு தண்டமிழ்த் தாயர், பெண்ணினம்
பெருமிதம் எய்தப் பிறந்தொளிர் அன்னை,
வருவதை அறிந்த வான்புகழ் அம்மை

உறைகழித் தொளிரும் ஒள்வாள் போல,
நிறைபெருங் கும்பலை நீந்தி மேடைமேல்
ஏறினார்; என்னென அறியா தயர்ந்தனர்;
சீறிய அமைச்சரும் செயலற நின்றார்;
காவல் துறையரும் ஓவியம் ஆனார்;

அம்மை செயல்

காளை யப்பரின் கையகத் திருந்த
தாளையும் விருதையும் தாவிப் பறித்து
வீசி எறிந்து 'வெட்கம்' என்றார்.
பேசுவார் எவரே? பேசாப் பொறுமைக்
கணிகலம் ஆகிய அரும்புகழ்ப் பெண்மை
தணிவிலா உணர்வால் தாக்க எழுந்திடின்?

புகழம்மை புகல்வு

"அருந்திறல் அமைச்சீர்! பெருந்திரள் மாந்தீர்!
விருதிற் குரிய வீரன் சேரன்
என்வயிற் றெழுந்த இளம்புலி என்பதை
முன்புள நீவிர் அனைவரும் அறிவீர்!
ஈன்ற பொழுதிற் பெரிதுவப் புறுவள்
சான்றோன் எனப்பிறர் சாற்றுதல் கேட்ட
தாயெனும் தகவுரை அறிவேன்; ஆயினும்
'சீ' யென விருதைச் சிதைத்தனென் வெறுப்பால்;

சேரனும் கீரனும்

“நாடு காவலில் நாளெலாம் கழித்துப்
பீடு நடையிடும் பெருமகன் ஒருமகன்;
ஏடு காவலில் இமைப்பெலாம் கழித்து
வாடு தாய்மொழி வளர்மகன் ஒருமகன்;
முன்னவன் சேரன்; பின்னவன் கீரன்;
என்மகார் இருவரும்; ஏற்றனர் இருபணி;
நாடும் மொழியும் நம்மிரு கண்ணென
நாட்டுத் தொண்டிலும் நந்தமிழ்த் தொண்டிலும்
பாடு பட்டதன் பயனைநீர் பாரீர்!

என்னே இரண்டகம்

நாடு காப்பவன் நற்பணி யாளனாம்;
ஏடு காப்பவன் ஆள்பவர்க் கெதிரியாம்;
அன்னை நாட்டைக் காத்தல் அறமாம்;
அன்னை மொழியைக் காத்தல் அழிவாம்;
நாட்டுப் பற்று நயத்தகும் ஒன்றாம்;
ஏட்டுப் பற்றோ இழிவினில் இழிவாம்;
நல்லர சிதுவோ? வல்லர சிதுவோ?
தக்கவர் செயல்படும் மக்களின் ஆட்சியோ?
சிக்கலை வளர்த்துச் சிதைப்பவர் ஆட்சியோ?
நடுநிலை நாட்டிய நல்லவர் ஆட்சியோ?

கெடுநிலை செய்தலில் கிளர்ந்தவர் ஆட்சியோ?
என்னே இரண்டகம்! என்னே இரண்டகம்!
தன்னோர் இல்லாத் தனிப்பேர் இரண்டகம்!

வடவரும் மடவரும்

செந்தமிழ்க் கீரன் செம்பணி அறிவீர்!
வந்தவர் அறியார் வாய்மொழி அவர்க்கே;
ஒருமைப் பாடே பெருமைப் பாடாய்,
அருமைப் பாடாய்க் கருதுவோம் நாமே;
ஒருமையுள் ஒருமை, உள்ளத்தொருமை;
ஒருவரை ஒருவர் மதித்துப் போற்றும்
உணர்வின் ஒருமை ; ஒருவரைத் தாழ்த்தி
ஒருவரை அடக்கி ஒருமைப் பாட்டைப்
படைப்போம் என்னல் பகற்கன வாமே;
எவர்க்கும் ஒப்பாம் உரிமை; அதுபோல்
எவர்மொழி தமக்கும் ஒப்பாம் உரிமை;
இந்நிலை இல்லை; இந்திய ஒருமை
வந்திடு மாமோ, வாழைப் பழமாய்?

அயலவர் வழிமுறை

"அயலவர் ஆண்டார்; அவர்மொழி புகுத்தினார்;
அயலவர் அகன்றார், அவர்மொழி அகற்றுவம்;
அயலவர் மொழியில் ஆட்சி நடத்தினால்

முயலா அடிமையர் நாமெனல் முறையே!
ஆதலால் ஆங்கில அயல்மொழி அகல்க!
காதலாம் இந்தியே ஆள்மொழி ஆகுக!
இந்தி மொழியே இந்திய மொழியாம்
இந்தி இல்லையேல் இந்தியா இல்லை
இந்தி மொழியரே இந்தியர் என்பதை
முந்துறச் செய்கென முழங்கினர் வடவர்;

தமிழர் நிலை

தூக்கத் தூக்கும் ஆடி நிழல்போல்
ஆக்கி அமைத்த தமிழ்நாட் டமைச்சோ -
பொறுத்திட வேண்டும் தமிழ்நா டென்னவே,
மறுத்துள மதிவலார் இவரே அல்லரோ -
வடவர் உரையை வழிமொழிந் தெங்கும்
தொடரவே செய்தது: தொடர்ந்தது துன்பம்.

எம்மொழி இந்தியோ?

ஓங்கிய ஆங்கிலம் அயல்மொழி என்றால்,
ஈங்குள இந்தியும் அயல்மொழி அன்றோ!
எந்தாய் மொழியோ இந்தி? அன்றி,
எந்தாய் மொழிவழி வந்ததோ இந்தியும்?
ஒருமைப் பாடெனும் பெரும்பறை முழக்கிப்
பெருமையாய்ப் பேசி வருபவர் மாறாய்

இந்தியை வளர்த்தலே எம்கடன் என்று
வந்த ஒருமையும் அழிந்திடச் செய்வர்;

கொள்ளைக் கொடுமை

"ஆங்கில இடத்தை ஆர்வமாய் இந்தி
தாங்கிடச் செய்வோம்; தவறோம்; அதற்குத்,
தக்கவை யெல்லாம் தடையறச் செய்வோம்;
சிக்கல் தீர்ந்திடும் என்பார்; இதுதான்;
கொள்ளை கொடுத்தவன் கூக்குரல் போடத்
துள்ளி ஒருவன் துடிப்பொடும் வந்து,
'களவுப் பொருளைக் கையுடன் கொணர்வேன்
துளியும் கவலேல்' என்றுபோய்ப் பற்றி,
இழந்த பொருளைப் பறித்துடன் கொணர்ந்தே
'உழந்த துயரம் பெரிதாம் அதற்கிப்
பொருளெலாம் கொண்டேன்' போ" என உரைத்தா
பொருளிழப் பாளி புகல்வ தென்ன?
'ஏட, பாவி! என்பொருள் இழந்தேன்
போட! போபோ! புல்லியன் நீயே!
தானே வந்த கொள்ளையன் அவனே!
நானே அழைத்த கொள்ளையன் நீயே!
இருவரும் கொள்ளையர் என்பதே உண்மை;
இருவருள் அவனே இயல்நெறிக் கொள்ளையன்;
நீயோ துணையாய் நின்றெனக் குதவும்

தூயோன் போலத் தொகையெலாம் சுருட்டினன!
இக்கயக் கொள்ளைக் கிணையிலை என்பான்
இக்கதை மறவீர் இங்குள மக்காள்!

மரத்த மண்டைகள்

செக்கிழு மாடுபோல் செய்ததே செய்தல்
தக்கதாய்ப் பழகிய தமிழர், எந்தப்
பக்கமும் பாராார்; பகுத்தறிந் துணராார்;
பற்றி எரிக்கினும் உற்றதை உணராார்;
உறக்கமே பொருளாய் உறைந்து கிடத்தலால்
இறங்கிய இறக்கம் இரங்கத் தக்கதே!
இப்பொழு தேனும் எண்ணத் தவறின்
எப்பொழு தேனும் உய்வே இல்லை

கீரன் கிளர்ச்சி

கீரன் செய்த கேடுதான் என்ன?
ஈர மற்ற எச்செயல் செய்தான்?
‘ஆட்சி மொழியாய் அருந்தமிழ் அமைக!’
‘பயிற்று மொழியாய்ப் பைந்தமிழ் பயில்க!’
‘இசையரங் கெல்லாம் இன்றமிழ் ஏறுக’
‘கோயில் மொழியாய்க் கொழுந்தமிழ் ஆகுக!’
‘கற்பவர் அனைவரும் கவின்தமிழ் காக்க!’
‘வாணிகர் அனைவரும் வளர்தமிழ் பேணுக!’

செய்தித் தாளினர் செந்தமிழ் காக்க!
‘விளம்பரக் களமெலாம் விரிதமிழ் எழுக!
‘தொழிலகம் எல்லாம் தொல்தமிழ் பொலிக!’
‘ஊர்ப்பெயர் தெருப்பெயர் உயர்தமிழ் நிலைக்க!’
‘அயன்மொழித் திணிப்பால் அன்னையை அழியீர்!’
‘நாடும் மொழியும் நம்மிரு கண்கள்’
‘எத்திசைக் காணினும் எத்திசைக் கேட்பினும்
அத்திசை யெல்லாம் முத்தமிழ் முழங்குக’
என்றான் கீரன்; ஏறென் ஊர்வலம்
சென்றான்; இங்கவன் செப்பிய வற்றுள்
குற்றம் எதுவோ கூறுமின் நீவீர்?

எது குற்றம்

“அன்னை வாழ்கென அறைவதும் தவறோ?
நம்மொழி காப்பதும் தவறோ? நம்மேல்
தம்மொழி திணிப்பது செம்மை; நாமோ
நம்மொழி காப்பது குற்றம்? நும்மொழி
திணியேல் என்பதோ தீராக் குற்றம்?
மணிமொழி என்றே வாழ்த்தலாம் அன்றோ!

விருந்தும் மருந்தும்

“யார்தடுத் தாலும் திணிப்பது தவறோம்;
போர்தொடுத் தேனும் திணிப்பதே உறுதி”

என்று சொல்லும் வெறியனைக் கேட்க,
ஒன்றும் வகையிலை; ஒருமைப் பாடாம்!
விரும்பின் மருந்தும் விருந்தே யாகும்;
விருந்தும் வெறுப்பின் மருந்தே யாகும்;
வற்புறுத் துதலால் கற்பித் திடுதல்
அடிமைப் படுத்தும் அரக்கம் அன்றோ!

அந்தோ அறமே!

விருப்ப மிகுதியால் வேற்று மொழிகள்ளை
இரும்பினை ஈர்க்கும் காந்தம் போல
எத்துணை யாயினும் இனிதுறக் கற்க;
கற்பதற் கேற்ற வாய்ப்புகள் செய்க;
இந்தி என்ன? ஏறிய வங்கம்
இனித்திடு தெலுங்கம், இயல்மலை யாளம்,
கன்னடம், துளுவம் நன்னய மராத்தி,
சிந்தி, சிங்களம், சீர்மலாய் கற்போம்;
ஆங்கிலம், செருமனி, பிரெஞ்சு, சீனம்,
ஓங்கிய உருசியம், உயரும் சப்பான்
ஆயவை யெல்லாம் அகமுவந் தேற்போம்;
ஏய அறிவியல் கலைத்திறம் இயைவோம்;
இந்நிலை விடுத்திவண் இன்னலால் புகுத்துதல்
கன்னலே எனினும் கசந்திடும் எட்டியே!
மற்றிதை வெறுப்பதை மறமெனக் கூறிக்

கற்பதே அறமெனக் கழறுதல் கொடுமை;
முதுகில் ஏறுதல் முறைமிகும் அறமோ?
'இதுநீ செய்யேல் இறங்'கெனல் மறமோ?
அறமே! அறமே! அந்தோ! அந்தோ!
இறையே உன்னைத் திறமாய்க் காக்க!

நாட்டு நிலைமை

வேலை யில்லா வெதுப்பம் ஒருபால்;
கூலி இல்லாக் குமுறல் ஒருபால்;
கல்வி வாய்ப்பிலாக் கயமை ஒருபால்;
செல்வச் செழிப்பிலாச் சிறுமை ஒருபால்;
சாலை வேண்டிச் சஞ்சலம் ஒருபால்;
ஆலை வேண்டி அரற்றல் ஒருபால்;
மருத்துவம் இன்றி மறுகுதல் ஒருபால்;
அருந்தூண் இன்றி அலைதல் ஒருபால்;
மழையிலாக் கொடுமை மாய்த்தல் ஒருபால்;
விளைவிலாத் தொல்லை விளைவ தொருபால்;
வெள்ளக் கொடுமை வெருட்டுதல் ஒருபால்;
கள்ள வாணிகக் கலப்படம் ஒருபால்;
கையூட் டழிவு கலக்குவ தொருபால்;
பொய்புரட் டரசியல் புகுவ தொருபால்;
உள்நாட் டழிபகை உலுக்குவ தொருபால்;
வெளிநாட் டழிவு வெடித்தல் ஒருபால்;

இவ்வள விருந்தும் இவற்றை விடுத்தே
எவ்வணம் இந்தியைத் திணிப்ப தென்றே
எண்ணிக் கிடப்பவர் இந்நாட் டாக்கம்
எண்ணி வாழ்வரோ? இனிய மக்காள்
"நும்மது நம்மது; நம்மது ஏஏ"
என்பவர் எப்படிச் செம்மையை அறிவார்?

தமிழர் தரக்கேடு

வடவர் வலக்கம் ஈதென இருக்க,
மடவர் தமிழர் மதியேன் கெட்டதோ?
இந்தியை எதிர்ப்பவர் எங்களை எதிர்க்கும்
முந்திய பகையென முனைப்பதும் என்னே!
உரிமை வீரரை உதைத்தவன் சுட்டவன்
வரிசை யாக அயல்நாட் டிருந்து
வந்தவன் தானோ? வரிதர மறுத்த
கட்ட பொம்மனைக் காட்டிக் கொடுத்தவன்
எட்டத் திருத்த அயல்நாட் டினனோ?
'தமிழைக் கெடுத்தவன் தமிழனே யன்றிப்
பிறனலன்' என்ற பெருமகன் **மறைமலை**
வாக்கை மெய்ம்மை ஆக்குவார் போல
எதிர்த்திடு வோரும், எதிர்த்திடு வோரை
எதிர்த்திடு வோரும் ஒருதாய் மக்களாய்
ஓரின மக்களாய்ச் சீரிலா திருந்தால்

தாய்மொழிக் கேடர் தமிழரே என்னத்
தடையெதும் உண்டோ? மடையரும் அறிவரே!

ஆள்வோர் அழிசெயல்

மொழிவழிக் காவலை மூச்செனக் கொண்ட
பழியிலாக் கீரன் பொழுதெலாம் தமிழைக்
காப்பதற் கென்றே காப்புக் கழகம்
அமைத்தான்; அறிஞர் ஆர்வலர் தமையெலாம்
அழைத்தான்; இணைத்தான்; அரும்பணி செய்தான்
'தமிழே பேசுக; தமிழே எழுதுக;
தமிழிலே எண்ணுக' என்றே முழங்கினான்;
பயிற்று மொழியாய்ப் பல்கலை காறும்
பைந்தமிழ் அமைகெனப் பரிவாய்க் கூறிக்
கன்னி முதலே சென்னை காறும்
நடைச்செல வேற்க நாடிக் கிளர்ந்தான்;
கடைச்செயல் என்ன கண்டனர் ஆள்வோர்?
'நாட்டின் அமைதியை நலிப்பான்' என்று
காட்டிய வழக்கில், காலம் கடத்திப்
பொய்ம்மைச் சான்றுகள் புதுப்புது வகையாய்
மெய்பெற ஆக்கிச் செய்வன செய்தும்,
உண்மைச் சான்றுகள் உள்ளன ஒழித்தும்,
கண்ணுள் விரல்விட் டாட்டுதல் போல
நண்புடை யவரை நடுக்கியும், மனத்தால்

எண்ணவும் நாணும் கொடுமைகள் இயற்றினர்;
வயிற்றில் அடிப்பதே வழியெனக் கொண்டு
பயிற்றும் தொழிலையும் பறித்தனர் அலைத்தார்;
இச்சிறு செய்கையர் என்மகன் சேரனை
மெச்சினர் என்ன மெய்ம்மறந் திடுவனோ?

தாய்மைத் தகவு

வந்துள சிறப்பால் தந்தை மறப்பினும்
தாயுளம் தாய்மொழி காக்கத் தவறாது
என்பதை அறிக! நன்கிதை அறிக!
நாடும் மொழியும் நம்மிரு கண்கள்
பீடுற இவற்றைப் பேணுதல் நம்கடன்
வாழிய தமிழே வாழிய என்றார்”

விழுந்தது திரை

‘வாழிய தமி’ழென வானகம் அதிரக்
காளையர் முழங்கினர்; கன்னியர் முழங்கினர்;
காளை யப்பரும் கண்ணில் ஊற்றெழ
உரக்க ஒலித்தார்; இரக்கமொன் றின்றிக்
கைத்தடி விம்மிக் களிப்புற ஆடின;
கண்ணீர்ப் புகைவெடி களிநடம் புரிந்தன;
துண்ணென நடுங்கிச் செல்லா தவர்களைக்

கண்ணிலாக் காப்பில் கனிந்து மாட்டினர்;
இன்பிய லாக எழுந்த நாடகம்
துன்பிய லாகத் தொடர்ந்தது போல
எழுந்தது முழக்கம்! விழுந்தது திரையே!

அமைச்சர் ஆண்மை

ஊரொலி எழுந்ததும் உள்நடுங் கமைச்சர்
யாரொரு பேரும் அறிந்திடா வகையில்
உந்தில் ஏறி ஒளிந்து சென்றார்;

உணமைககு உறையுள

சென்ற அமைச்சர் சிறுவியர் துடைத்து,
வந்த வடவர், முந்துற இருந்த
வளமனைக் கேகி, வாய்மொழி உரைத்தார்;
"உளநிலை உரைப்ப தென்கடன்; கேளீர்!
உம்முரை அனைத்தும் உவப்புடன் கேட்டனர்;
செம்மொழி இந்தியில் செப்பிய தனைத்தும்
செவிமடுத் தின்பால் செழித்தனர்; மேலும்
செவியுறும் ஆர்வம் சிறக்கவே ஆர்த்தனர்;
இடையிடை எழுந்த ஒலியெலாம் ஆர்வம்
மிடையொலி அன்றி வேறிலை" என்றார்.

வடவர் அருமையும்
அமைச்சர் திறமையும்

“மொழிந்தது புரியா தெழுந்த ஒலியென
எண்ணினேன்; இந்தி எதிர்ப்பாய்க் கருதினேன்;
என்றார் வடவர்; இந்தியை எதிர்ப்பவர்
இன்றமிழ் நாட்டில் எவரும் இலரே!
கீழ்பாக் கத்துக் கிறுக்கரும் கூட
வாய்த்த இந்தியே வாழ்கென உரைப்பர்;
இந்தியை எதிர்ப்பவர் இந்திய நாட்டையே
எதிர்ப்பவர் என்பது எங்களின் முழக்கம்;
எதிர்ப்பெதும் இல்லையாம்” என்றார் அமைச்சர்.

நாடானியர் நாடகம்

‘ஒஒ’ என்றே உவந்தார் வட்வர்;
‘கேகே’ என்றே கிளர்ந்தார் அமைச்சர்;
‘ஆஆ’ என்றே ஆர்த்தனர் அடிமையர்;
அவரவர் உள்மனத் தணுக்கள் கூட
-அப்படி அவர்க்கவை இருந்தன வென்றால்-
நகைத்தன நகையாய் நகைத்தன வாமே!

வாழ்க! வாழ்க!

வாய்த்த மக்களைப் பெற்ற
தாயே தமிழே! வாழிய நன்றே!

அந்நாளில் ஓர் அஞ்சல்

அன்புள்ள புலவர் மணி பாவலர்
திரு. இளங்குமரன் ஐயா அவர்கட்கு,

வணக்கம். நலம். அஃதே என் நாட்டமும்.

தங்களது குறுங்காவியந் தன்னைப் படித்தின்புற்றேன். "நாடும் மொழியும் நம்மிரு கண்கள்" எனும் நன்மொழி காவியத்தில் வேரோடிக் கிளைத்துப் பூத்திலங்குகிறது. கதையை யமைத்துள்ள முறைமை நன்று. கருத்துத் தெளிவும், கதைப் போக்கும் சிறக்கக் கண்டேன். தங்கு தடையற்ற, தளர்வற்ற கவிதையோட்டம், பொங்கு புனலெனப் பொலிவுற்றுப் போற்றற் குரியதாகின்றது.

"பாண்டிய வேந்தனே ஈண்டின னென்னக்
காண்டகு சீர்த்திக் காளை"த் தோற்றம்

காட்சியின்பம் பயக்கின்றது. கவிதை நலம் கொழிக்கின்றது.

"மன்பதைக் கெல்லாம் தாய்மொழி ஒன்றே
தன்மொழி; மற்றவை அயல்மொழி தாமே"

எனும் உண்மையை உணரார் எத்திப் பிழைத்திடும் கயவரே!

"நாடு காவலில் நாளெலாம் கழித்துப்
பீடு நடையிடும் பெருமகன் ஒருமகன்
. . . . . .
தன்னே ரில்லாத் தனிப்பே ரிரண்டகம்"

எனும் அடிகளில் உணர்ச்சியீட்டமும் உயிரோட்டமும் ஓங்கி யுள்ளன.

"தூக்கத் தூக்கும் ஆடி நிழல் போல்
ஆக்கி அமைத்த தமிழ்நாட் டமைச்சு"

அழகும் எளிமையும் அமைந்துள வுவமையிது!

"கையும் காலும் தூக்க ஆடும் ஆடிப் பாவை" யின் நினைவிங் கெழுகின்றது.

"எத்திசைக் காணினும் எத்திசைக் கேட்பினும்
அத்திசை யெல்லாம் புத்தமிழ் தாய
முத்தமிழ் பொலிக."

"ஆட்சி மொழியாய் அருந்தமிழ் ஆகுக

. . . . . .

நாடும் மொழியும் நம்மிரு கண்கள்"

"தாய்மொழிக் கேடர் தமிழரே அன்றி
ஏய்ந்த இனத்தவர் எவரு மிலரே!"

என்னெஞ்சம் கவர்ந்த எழில் வரிகள் இவை.

உண்மையும் ஊக்கமும் உயர்த்தும் பெற்றிய.

இதுபோன்று பலவும், பெருங்காவியமும் படைத்து இன்றமிழ் அன்னை எழில்நலம் சிறக்கச் செய்திடுவீர்கள் என்ற உறுதி ஒளிவிடுகின்றது.

6 - 11 - 1967
இளங்கோ மன்றம்
தியாகராசர் கல்லூரி,
மதுரை.

அன்பு மாணவன்

சு. பகவத்சிங்

வெளியீடு :

திருவள்ளுவர் தவச் சாலை

திருவளர்குடி (அல்லூர்),

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.